மலர்-3 இதழ்-72 ஆகஸ்ட் 16-31 2019 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர் மெயில் புக்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




# உலகையே திரும்பி பார்க்க வைத்த அத்திவரதர்



# கருடன் மட்டுமல்ல கருடி வாகனமும் வழிபடப்படுகின்றது

கருட பகவான் பெருமாளுடைய வாகனம் பொதுவாக கருடன் ஆண் வம்சமாகும், ஆனால் பெண் கருடன் கேள்விப்பட்டதுன்டா? கருடனின் மனைவியான கருடி எனப்பெயர் கொண்ட பெண் கருட வாகனமும் உள்ளது.

நாகை அழகியார் கோவில் தாயாருக்கு பெண் கருட (கருடி) வாஹனம் உண்டு.

இந்த கருடி வாஹனத்தில்தான் தாயார் பவனிவருகிறார். பல கோவில்களில் தாயார் கோவிலை விட்டு வெளியே வரமாட்டார். (படிதாண்டா பத்தினி என பெயர் உண்டு).

நாகை அழகியார் கோவிலில் பெருமாள் கருட வாஹனத்திலும் தாயார் கருடி வாகனத்திலும் ஜோடியாக வருவது கண் கொள்ளா காட்சியாகும்.





# நான்கு வகை விக்கிரகங்கள்

நாம் வழிபடும் விக்கிரகங்களை நான்கு வகையாக நம் முன்னோர் பிரித்து வைத் துள்ளனர். சவுமிய மூர்த்தம், போக மூர்த்தம், யோகமூர்த்தம், உக்கிர மூர்த்தம் என்று நான்கு வகைப்படும். இந்த நான்கு வகைக்கும் உள்ள சிறப்புகளைப் பார்ப்போம்.

புன்சிரிப்புடன் அழகே உருவான ராஜராஜேஸ் வரி, பார்த்தசாரதி, மீனாட்சி அம்மன், போன்ற விக்கிரகங்கள் "சவுமிய" (சாந்தம்) வகையை சார்ந்தது.

தன் மனைவியுடன் சேர்ந்து ஒரே பீடத்தில் நின்றபடி அல்லது அமர்ந்தபடி இருக்கும் ராதா கிருஷ்ணன், உமாமகேஸ்வரர் போன்ற சிலைகள் "போக மூர்த்தி."

யோக நரசிம்மர், ஐயப்பன் போன்ற விக்கிரகங்கள் "யோகமூர்த்தியாவர்".

கோபத்துடன் காட்சியளிக்கும் காளி, துர்கை, வீரபத்திரர், உக்கிரநரசிம்மர் போன்ற விக்கிரகங்கள் "உக்கிர மூர்த்திகள்" என்று அழைக்கப்படுகின்றன.





# முதன் முதலில் அந்தாதி பாடியவர் காரைக்கால் அம்மையார்

கயிலாயத்தில், இறைவன் இருக்கும் புனித இடம் என்பதால் கால்களைப்பதிக்காமல், கையால் ஊன்றி தலைகீழாக நடந்து, சிவபெருமானை அடைந்தார் காரைக்கால் அம்மையார் சிவபெருமானும், அம்மையே வருக என அழைத்துக்கொண்டார்.

என்ன வேண்டும் என்று கேட்க,

“பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்பு உண்டெனில் உன்னை மறவாமை வேண்டும். இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி, அறவா நீ ஆடும் பொழுது, உன் அடியின் கீழ் இருக்க” என்று வேண்டினார். அவருக்கு சிவ பெருமான் தன் திருத்தாண்டவம் காட்டி, திருவாலங்காட்டிற்கு வந்து தன் திருவடிக் கீழ் இருக்க அருளினார்.

காரைக்கால் அம்மையாரை மூன்று பெண் நாயன்மார்களில் ஒருவராக கூறுகின்றனர். இசைத்தமிழால் இறைவனைப் பாடியவர்களில் முதலாமவர் ஆகும். இவர் இயற்றிய “அற்புதத் திருவந்தாதி” “திருவாலங்காட்டு சிவப்பதிகம்” “திரு இரட்டை மணிமாலை” போன்ற நூல்களை இயற்றி தமிழக்கு பெருமை சேர்த்தார். ஒருபாட்டின் கடைசி வார்த்தையும் அடுத்தபாட்டிற்கு முதலாவதாக இருக்கும் (அந்தம்+ஆதி) அந்தாதி பாடியவர் இவர்தான்.

# காலில் கறுப்பு கயிறு கட்டிகொள்வது ஏன்?

பலர் கறுப்பு நிறத்தை துக்கத்திற்கு மட்டுமே பயன்படுத்துகின்றனர். பெரும்பாலானவர்கள் கறுப்பு நிறத்தில் ஆடை அணிய மாட்டார்கள்.

ஒற்றை காலில் கறுப்பு கயிறு கட்டுவதால் ஆபத்தா? எனக்கேட்டால் கிடையவே கிடையாது. அவ்வாறு கட்டி கொள்வதால் நம்மை சுற்று தீய சக்திகள் நெருங்காது. அதேபோல் செய்வினை சூனியங்கள் நெருங்காது. கண் திருஷ்டி படாது. அது மட்டுமின்றி சனீஸ்வர பகவானின் பார்வையின் வேகத்தை இந்த கறுப்பு கயிறு குறைக்கிறது.

கறுப்பு கயிறில் 9 முடிச்சுகள் போட்டிருக்க வேண்டியது அவசியம். இதனை பிரம்ம முகூர்த்தத்தில் கட்டி கொள்ளலாம். அல்லது நண்பகல் 12 மணிக்கு கட்டலாம். இதனை சனிக்கிழமையில் கட்டிகொள்வது சிறப்பு. வலது காலில் இதனை கட்டிகொள்ள வேண் டும்.

கறுப்பு கயிறை நாம் கட்டி கொண்டிருந்தால் நம்மையும் அறியாமல் நாம் விழுந்தாலும் மிகப் பெரிய ஆபத்து நேராமல் பாதுகாக்கும். நீண்ட கால தீராத நோய் இருந்தால், உடல் நல கோளாறுகள் இருந்தால், கறுப்பு கயிறை ஆஞ்சநேயர் கோவிலில் வைத்து கட்டி கொள்ளவேண்டும். இதனை கட்டும்போது துர்கா தேவி மற்றும் ஆஞ்சநேயரை மனதில் நினைத்து ராம ஜெயம் உச்சரிக்கலாம்.

எதிர்மறை ஆற்றலில் தாக்குதல் குறையும். பருவமடைந்த ஆரம்பத்தில் வெளியே செல்லும் பெண்களுக்கு இதனை கட்டி விடுவது மிகப் சிறப்பு.

– மஹா மந்த்ர போதிணி நூலில் இருந்து





# மனித உடலில் இருக்கும் லட்சுமிகள்

நம் உடலில் வாசம் செய்யும் சித்த அஷ்ட லஷ்மி (ரகசியம்) தெரியுமா?

நம் பாதங்களில் வசிப்பவள் "ஆதிலஷ்மி".

நம் பாதம் பிறர் மீது தெரியாமல் பட்டால் சிவ சிவ எனக் கூறி மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிடில் ஆதிலஷ்மி நம்மை விட்டு விலகி விடுவாள்.

நம் முழங்கால் பகுதியில் வசிப்பவள் "கஜலஷ்மி".

காலை நீட்டியபடி புத்தகம் படிப்பதாலும், நெல், அரிசி இவைகளை கால்களால் மிதிப்பதாலும் நம்மை விட்டு கஜலட்சுமி விலகுகிறாள்!

நம் இடுப்புக்கு கீழ் பகுதியில் "வீர்யலஷ்மி" வசிக்கிறாள்.

பிறரை நித்திப்பதன் மூலம் சாபம் பெறுபவர் களை விட்டு இந்த வீர்யலஷ்மி விலகுகிறாள்.

நம் இடது தொடையில் வசிப்பவள் "விஜய லஷ்மி".

இடது தொடை எப்போதும் மனைவிக்குச் சொந்தம். எனவே மனைவியை விடுத்து பிறன் மனை நோக்கினால் இந்த விஜயலக்ஷ்மி விலகி விடுவாள்.

வலது தொடையில் வசிப்பவள் "சந்தான லஷ்மி".

பெற்றோர்கள் கன்னிகாதானம் செய்யும்போது பெண்ணை வலது தொடையில் அமர வைக்க வேண்டும்.

இடது தொடையிலோ, இரு தொடைகள் இடையே அமர வைத்தால் இந்த சந்தானலஷ்மி விலகி விடுவாள்.

நமது வயிற்றுப் பகுதியில் வசிப்பவள் "தான்யலஷ்மி".

எச்சில் உணவு, ஊசிப் போன உணவு இவை களை ஏழைகளுக்கோ பிறருக்கோ கொடுத்தால் இவள் விலகி விடுவாள்.

நமது நெஞ்சுப் பகுதியில் வசிப்பவள் "தைரிய லஷ்மி".

நெஞ்சிலே நஞ்சை வைத்து பிறரைக் குறை கூறி குடும்பத்தை கெடுப்பவர்களை விட்டு இவள் விலகுகிறாள்.

நமது கழுத்துப் பகுதியில் வசிப்பவள் "வித்யாலஷ்மி".



கழுத்தில் ஒரு ருத்ராட்சம் அணியாதவனும், பூணூல், தாலி என குடும்ப பராம்பரிய சின்னத்தை அணியாதவர்களை விட்டு இவள் விலகுகிறாள்.

நம் நெற்றியின் மத்தியில் வசிப்பவள் "சௌபாக்யலஷ்மி".

இவள் நம் புருவத்தை சிரைப்பதாலும் மஞ்சள் கலந்த குங்குமம் விட்டு ஸ்டிக்கர் பொட்டு வைப்பதாலும் வகிட்டில் குங்குமம் வைக்காமல் இருப்பதாலும், வீபூதி, நாமம் அணியாவிட்டாலும் நம்மை விட்டு விலகுகிறாள்.

பல தவறுகள் செய்து நம் அங்கத்தில் இருக்கும் லஷ்மிகளை விரட்டி விட்டால் நாம் எப்படி செழிப்பாக வாழ முடியும்?



ஆன்மிகமலர் மெயில் புக்

அழகிய வடிவமைப்பில்

வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்

Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

நேதாஜியை பார்த்து பயந்த வெள்ளையர்கள்

# திருமுறை பாடல் முழங்க வழங்கப்பட்ட சுதந்திரச் செங்கோல்

இந்திய சுதந்திரத்திற்காக பல்வேறு தரப்பினர் பல்வேறு வகையில் போராடி வந்தனர். இதில் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், மிகவும் தீவிரமாக தனது போராட்டத்தை களத்தில் அரங்கேற்றினார்.

ஹிட்லரின் நாஜிப்படை போன்று, பல்வேறு படைகளன்களை திரட்டி, இந்தியாவை அடிமைப்படுத்தி, இந்தியாவை கொள்ளையடித்துக் கொண்டிருந்த வெள்ளைக் காரர்களை ஓட ஓட விரட்டியடிக்கும் நோக்கில், மிகப் பெரிய ஆயுதப் படையை இந்தியாவை நோக்கி திரட்டிக்கொண்டு வந்தார்.

இந்த தகவலை அறிந்த வெள்ளைக்காரர்கள் மிகுந்த பேரதிர்ச்சி அடைந்தனர். ஏற்கனவே நடைபெற்றுக் கொண்டிருந்த உலகப் போரில் வெள்ளைக்காரர்களுக்கு போதிய படை பலம் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் இந்தியர் நேதாஜி படையுடன் வந்து நம்மை தாக்கி விரட்டிவிட்டால் உலக அளவில் அவமானமாகிவிடும் என்று எண்ணினர் வெள்ளைக்கார கொள்ளை யர்கள், உடனே அவர்களின் மேலிடத்திலிருந்து ஒரு தகவல் வந்தது.

நேதாஜியுடன் போரிட்டு நாம் தோற்றால் அவமானமாகிவிடும், அதனால் நாமாக இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுத்துவிட்டு நட்புடன் விலகிக் கொள்வது போன்று பாவனை செய்துவிட்டு இந்தியாவிலிருந்து தப்பித்து வந்து விடுங்கள் என்ற உத்தரவு மௌண்ட் பேட்டனுக்கு கிடைத்ததும்.

மௌண்ட் பேட்டன், நேருவை அழைத்து, உங்கள் இந்தியாவிற்கு சுதந்திரம் கொடுக்கப் போகிறோம் அதை எப்படிக் கொடுப்பது என்று கேட்க,

நேருவுக்கு குழப்பமாக இருந்தது.

எதை அடையாளமாக வைத்து சுதந்திரத்தைப் பெறுவது.....

(பிரிட்டிஷ் அரசு இந்தியாவுக்கு சுதந்திரம் வழங்கியது என்பதற்கு எந்த சாசனமும் இல்லை).

உடனே நேரு மூதறிஞர் ராஜாஜியை அணுகி,

"எனக்கு இந்த நடைமுறைகள் தெரியாது, அதனால் தாங்கள் தான் தீர்வு கூற வேண்டும்" என்று கூற,

உடனே ராஜாஜி "கவலை வேண்டாம், எங்கள் தமிழகத்தில் மன்னர்களிடம் ஆட்சி மாற்றம் ஏற்படும் போது, ராஜகுருவாக இருப்பவர், செங்கோலைப் புதிய மன்னருக்குக் கொடுத்து, ஆட்சி மாற்றம் செய்வர். நாமும் அன்னியன் கையால் சுதந்திரம் பெறுவதை விட, குரு மகானின் கையால் செங்கோலைப் பெற்று ஆட்சி மாற்றம் அடையலாம்", என்றார்.




நேருவும் "நேரம் குறைவாக உள்ளது.. உடனே ஏற்பாட்டை செய்யுங்கள்", என்று உத்தரவிட்டார்.

ராஜாஜி உடனே திருவாவடுதுறை ஆதீனத் தைத் தொடர்பு கொண்டு விஷயத்தைச் சொல்ல,

அப்போது கடும் காய்ச்சலில் இருந்த ஆதீனம் அவர்கள், உடனே முறையாக செங்கோல் தயாரித்து, தங்க முலாம் பூசி,

இளைய ஆதீனம் தம்பிரான் பண்டார சுவாமிகளிடம் பொறுப்பை ஒப்படைத்து, கூடவே ஓதுவார் மூர்த்திகளையும் உடன் அனுப்பி வைத்தார். (தேவாரத்தில் இருந்து கோளறு பதிகம் பதினோரு பாடல்களை குறித்துக் கொடுத்தார் இந்த பாடல்களை அப்போது ஓதுவார் மூர்த்திகள் பாட வேண்டும்).

ராஜாஜி அனுப்பிய தனி விமானத்தில் அவர்கள் செங்கோலுடன் டில்லி போய் சேர்ந் தனர்.

அப்போது ஆயிரம் ஆண்டு அடிமைத் தளையில் இருந்து, பாரதத்தின் விடுதலை பெறும் விழாவிற்காக எல்லோரும் காத்திருந்தனர்.

அந்த சுதந்திர வைபவ தினத்தில் மௌண்ட் பேட்டனிடம் இருந்து செங்கோலை குரு மகா சன்னிதானம் திருவாவடுதுறை ஆதீனம் தம்பிரான் பண்டார சுவாமிகள் பெற்று, செங்கோலுக்கு புனித நீர் தெளித்து, ஓதுவார் மூர்த்திகள், **வேயிறு தோளிபங்கன்** என்று துவங்குகிற தேவார திருப்பதிகத்தைப் பாட, பதினோராவது பாடலின் கடைசி வரி,

**"அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே"**

இந்த வரியைப் பாடி முடிக்கும் போது தான், சுவாமிகள் செங்கோலை நேருவிடத்தில் கொடுத் தார்.

அந்த நிகழ்வைத் தான் நாம் சுதந்திர தினமாகக் கொண்டாடுகிறோம்.

இந்த நிகழ்வு தமிழுக்கும் தமிழகத்திற்கும் எவ்வளவு பெருமை..

திருவாவடுதுறை ஆதீன மடத்தில், இந்த செங்கோல் வைபவம், கருப்பு வெள்ளை புகைப்படமாக உள்ளது. புகைப்படத்தில் 15.8.1947 என்று தேதியிட்டு இருப்பதையும், நேரு, கையில் செங்கோலுடன் இருப்பதையும், தம்பிரான் பண்டார ஸ்வாமிகள் அருகில் உள்ளதையும் படத்தில் காணுங்கள்....

www.aanmeegamalar.com





www.aanmeegamalar.com

# சிறப்பு தரிசனத்தை இலவசமாக தரும் திருப்பதி உண்டியல்




திருப்பதியில் பல்வேறு உண்டியல்கள் உள்ளன இதில் "காவாளம் " என்று சொல்லப்படும் பிரமாண்ட உண்டியல்களும் இடம் பெற்றிருக்கும், இது ஒரு துணியால் சூழப்பட்டது போன்று இருக்கும், இந்த உண்டியல் அவ்வப்போது நிரம்பியதும் உடனுக்குடன் அதை அங்கிருந்து அப்புறப்படுத்தி வேறு உண்டியலைக் கொண்டு வந்து வைத்து விடுவார் கள். காலியாக இருந்த உண்டியல் ஒரே நாளிலே நிறைந்து உடனடியாக நிறைந்து வேறு உண்டியல் மாற்றும் நிகழ்வு திருமலையில் சாதாரணம்.

ஏழுமலையான் தரிசனத்தை முடித்துவிட்டு உண்டியலில் காணிக்கை செலுத்துவதற்காக நீங்கள் வரிசையில் நின்று கொண் டிருக்கிறீர்கள் என்று வைத் துக் கொள்வோம். சரியாக உங்கள் முறை வரும்போது நீங்கள் பணம் செலுத்திய அல்லது செலுத்துவதற்குக் காத் திருக்கிற நேரத்தில் அந்த உண்டியல் நிரம்பி விட்டது என்பதை தேவஸ் தான ஊழியர்கள் அறிந்து கொண்டால் அதற்கு மேல் போட அனுமதிக்க மாட் டார்கள்.

உண்டியலில் சீல் வைத்து அங்கிருந்து அப் புறப்படுத்தும் வேளையில் அந்த உண்டியலுக்கு அருகில் நிற்கின்ற இரண்டு பக்தர்களைத் தங்களுடன் அழைத்துச் செல்வார்கள். "இந்த உண்டியல் நிரம்பி விட்டது, இதைக் கச்சிதமாக சீல் செய்து எடுத்துக் கொண்டு போனார்கள். அப்போது நான் உடன் இருந்தேன்" என்று அந்த இரண்டு பக்தரும் சாட்சிக் கையெழுத்து போட வேண்டுமாம். தைரியமாக கையெழுத்துப் போடலாம். இது சம்பிரதாயத்துக்காக செய்யப் படுகின்ற ஒன்று. ஆதி காலத்திலிருந்து பின்பற்றப்படும் நடைமுறை. ஆகவே அதை இன்றும் விடாமல் கடைபிடித்து வருகிறது தேவஸ்தானம். இப்படி சாட்சிக் கையெழுத் துப் போட்ட இரண்டு நபர்களுக்கு மீண்டும் ஒருமுறை ஏழுமலையான் தரிசனம் இலவச மாக, அதுவும் வெகு அருகில் அழைத்துச் சென்று தரிசனம் செய்து வைப்பார்கள்.இந்த தரிசனத்தின் போது உங்களை எவரும் அவச ரப்படுத்த மாட்டார்கள். நின்று நிதானமாகப் பிரார்த்தனை செய்து வணக்கிவிட்டு வரலாம்.





இலவச இதழ்

ஆன்மிகமலர் மெயில் புக்



உங்களது மொபைல் போனில் படிக்க....

GET IT ON Google Play

ஆன்மிகமலர்

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
ஆன்மிகமலர் இ-புத்தகம் படிக்கலாம்.

# திருபாற்கடல் கூறும்ரகசியம்

தற்போதைய காலகட்டத்தில் புராண நிகழ்வுகள் அனைத்தும் கிண்டலடித்து பேசும் பழக்கம் வெகுவாக பரவிவருகிறது.

அந்தவகையில் பாற்கடலைகடைந்த கதையும் கீழ்கண்டவாறு கிண்டலடித்துக் கூறப்பட்டு வருகிறது.

இதற்கு சரியான விளக்கத்தையும் அன்பர் ஒருவர் பதிவிட்டுள்ளார், அதைப்பார்ப்போம்.

பாற்கடலை கடைய அமுதம் வருமா? அப்படி கடைவதற்கு மேரு மலை மத் தாக பயன் பட்டதாம். வாசுகி பாம்பு கயிறாக பயன்பட்டதாம் இதைவிட ஒரு காமெடி என்னன்னா அவ்ளோ பெரிய மலையை ஒரு ஆமை தான் முதுகுல தாங்கிக்கிச்சாம் கேட்டா அது விஷ்னு வோட அவதாரமாம். அவ்ளோ பெரிய ஆமையை Discovery சேனல்ல கூட காமிக்கலையே.

தேவர்களும், அசுரர்களும் பாம்பின் தலையையும் வாலையும் பிடித்து இழுத்தார்களாம்.

அப்படி இழுக்கும் போது முதலில் ஆலகால விஷம் வந்ததாம். அத அப்படியே சிவன் அள்ளிக் குடிச்சாராம். அப்புறம் அமுதம் வந்துச்சாம் அத குடிச்ச தேவர்கள் சாகவே இல்லையாம்.



இப்படி ஒரு Fantacy கதைய Hollywood படத்துல கூட சொன்னதில்ல. இந்த கதையையெல்லாம் நம்பிக்கிட்டு இன்னமும் நீ சாமி கும்பிட்டுகிட்டு இருக்க.

இப்படி தன் இரவல் அறிவையெல்லாம் ஒன்று திரட்டி ரொம்ப பெரிய கஷ்டமான கேள்வியக் கேட்டு விட்டதாகவும் என்னை மட்டம் தட்டி விட்டதாகவும் இருமாந்திருந்தார் நண்பர் ஒருவர் (பாவம் சமீபத்தில்தான் பகுத்தறிவு பால்வாடியில் சேர்ந்திருப்பார் போல).

நான் நிதானமாக சொன்னேன் இந்த கலாச் சாரத்தில் சொல்லப்படுகின்ற கதைகள் எல்லாம் உருவகங்கள்.

மிகப்பெரிய தத்துவங்களை எல்லாம் குழந் தைக்கு கூட புரியும் வண்ணம் புனையப்பட்ட உருவகக்கதைகள் இவை.

இவற்றை கதையை அப்படியே எடுத்துக் கொண்டு வாதிடுவது அறிவுடைமை ஆகாது.

அதனால் Encoding செய்யப்பட்ட உருவகங்களை Decoding செய்தால் போதும். பொருள் அதுவாகவே விளங்கும்.

சரி. இப்போது இந்த பாற்கடல் கதையை Decode செய்கிறேன்.

பாற்கடல் குண்டலினி சக்தி

மேருமலை முதுகுத்தண்டு

வாசுகி பாம்பு மூச்சுக்காற்று (உஷ்...உஷ்னு சத்தம் வருதா)

தேவ, அசுரர் இடகலை, பிங்கலை (நாடி)

ஆமை ஐம்புலன்களையும் அடக்கி ஆளும் தன்மை

தொண்டைக்குழிவிசுக்தி

விஷ்னு வாழ்வு

ஆலகாலவிஷம் கபம்

அமுதம் நித்ய வாழ்வு(மரணமில்லா பெருவாழ்வு)

அதாவது முதுத்தண்டின் இரு பக்கமும் செல்லும் இடகலை, பிங்கலை நாடி வழியே மூச்சுக்காற்று சதா ஓடிக்கொண்டிருக்கிறது.

(இதைத்தான் சிவவாக்கியர் சங்கிரண்டையும் தவிர்ந்து தாரை ஊதச் சொன்னார்)

ஆமைபோல் ஐம்புலன்களையும் அடக்கி அதை ஆதாரமாகக் கொண்டு வாசி யோகம் மூலம் இடகலை, பிங்கலை வழியே மாற்றி மாற்றி மூச்சுக்காற்றை இழுக்கும்போது (நாடி சுத்தி) நித்யப் பெருவாழ்விற்கான அமுதம் சுரக் கும் அதை உண்டவர்கள் தேவர்கள் போல மரண மில்லா பெருவாழ்வு அடைவர்.

ஆனால் இந்தப்பயிற்சியின் போது அளவுக் கதிகமான கபமே முதலில் வெளிப்படும் ஆனால் பரம்பொருள் சிவனின் கருணையால் அந்த கபத்தை கலைத்துவிடும். (சந்தேகம் இருப்பின் வாசி யோகம் பயின்றவரிடம் கேட்டு தெளிவு பெறலாம்) என்று விளக்கினேன்.

அவரும் பாவம் வேறொருவருக்கு பாடம் எடுக்க சென்றுவிட்டார். விநாயகர் சக்தியின் அழுக்குருண்டையில் பிறந்தவராமே என்று.

அவர் கிடக்கட்டும். உங்களுக்காக (புரிந்து கொள்ள நினைப்போருக்கு) மேலும் சில உருவ கங்களின் Decodings ஒரே இறைவன் (இஸ்லாம்) அத்வைதம் (Oneness)

சக்தி, சிவன் துவைதம் (Duality)

பிதா, சுதன், பரிசுத்த ஆவிவிசிஷ்டா துவைதம்

உருவகம்

சும்மா இருந்தால் சிவம் (Static)

ஓயாமல் அசைந்தால் சக்தி (Dymnamic)

சக்தி இல்லையேல் சிவம் இல்லை உருவகம்

திரிசூலம்இச்சா சக்தி,கிரியா சக்தி, ஞான சக்தியின் உருவகம்

கணபதியை (பூமி) சக்தி (Dynamic force)

அழுக்கை (Dust of universe) உருட்டி படைத்தாள் இது பூமி தோன்றலின் உருவகம்

தில்லை நடராசர் நடனம் Cosmic dance ன் உருவகம் (அறிவியல் ஏற்றுக்கொண்டது)

சிவன் (யோக சக்தி), திருமால் (போகசக்தி)

இவற்றின் கலவையான சக்தியே ஐயப்பன் உருவகம்

முப்பரிமாணம் மட்டுமே உணரக்கூடிய மனித மூளைக்கு நாலாவது பரிமானமான காலத்தை உணர்த்த மகாகாலன், அதன் எதிர்பரிமாணம் மகாகாளி உருவகம்

- Vijayalakshmi Chidambaram

# சரஸ்வதி தேவி வெள்ளை ஆடை அணிந்ததின் ரகசியம்



மற்ற தேவியர் வண்ண ஆடை உடுத்த சரஸ்வதி மட்டும் வெள்ளை ஆடை உடுத்தி, வெள்ளைத்தாமரையில் வீற்றிருக்கிறாள். இதற்கு காரணம் உண்டு.

சரஸ்வதி ஞான வடிவானவள். ஞானம் எங்கிருக்கிறதோ அங்கே அடக்கம் இருக்கும். சரஸ்வதி கல்வி செல்வம்.

பிரம்மனின் படைப்புகள் முதன் முதலில் பேசும் திறன் இல்லாமல் கிடந்தன.அதன் பின்னர் பிரம்மன் சரஸ்வதியை வேண்ட சரஸ்வதி அன்னை அருள்பாலித்தாள். அதன் பின்னரே பிரம்மனின் படைப்புள் பேசும் திறமையை பெற்றன.

தூய வெள்ளை ஆடை அணிபவர்களுக்கு தனிமரி யாதை உண்டு.

கற்றவர், மரியாதைக்குரியவர் என்பதை எடுத்துகாட்டவே,கல்வி தெய்வமான சரஸ்வதியும் வெள்ளை ஆடை அணிந் திருக்கிறாள்.

வெள்ளை என்பது மாசு மருவற்றது. ஒருவன் கற்ற கல்வியும், மாசு மருவற்றதாக இருக்க வேண்டும் என்பதை இது காட்டுகிறது.

சரஸ்வதி அணிந்துள்ள புடவை நிறம் வெள்ளை.வானவில்லின் 7வண்ணங்களில் சேராத வெள்ளையை சரஸ்வதிக்கு மட்டும் சாத்துவர்.

மலம் என்றால் அழுக்கு. உடலிலுள்ள அழுக்கை மலம் என்கிறோம். நிர்மலம் என்றால் அழுக்கற்றது. தெளிவானது. நன்மையும், தீமையும் கலந்து இருக்கும் இந்த உலகத்தில் அழுக்கே இல்லாத கல்வியைத் தேர்ந்தெடுத்து, கற்க வேண்டும் என்பதையே அவளுக்குரிய வெள்ளை நிறம் உணர்த்துகிறது.

வெள்ளை நிறத்தில் மட்டும் ஒளி ஊடுருவும். இதனால்தான் சரஸ்வதி தேவி நிர்மலமான ஸ்படிகத்தால் ஆன மாலையை அணிந்திருக்கிறாள்.

சரஸ்வதிக்கு கலைமகள் என்ற பெயர் உண்டு. கலை என்றால் வளர்வது.கல்வியும் படிக்க படிக்க வளர்ந்து கொண்டே போகும்.அதற்கு முடிவுயில்லை .தன் வாழ்நாளுக்குள்,ஒருவன் எல்லாக் கலைகளையும் கற்று விட முடியாது. இதைத் தான் கற்றது கைம்மண்ணளவு,கல்லாதது உலகளவு என்பர்.

படிப்பு தவிர பாடல்,நாடகம்,இசை போன்ற கலைகளையும் சரஸ்வதி தேவி நமக்கு சிறப்புற கிடைக்க அருள்பாவிக்கிறாள்.

சரஸ்வதி பூஜையின் அர்த்தம்

பூஜை என்பது பூஜா என்பதில் இருந்து பிறந்தது.“பூ”என்றால் பூர்த்தி.“ஜா”என்றால் உண்டாக்குவது.

தான் என்ற அகங்காரம், அடுத்தவனை விட நன்றாக இருக்க வேண்டுமென்ற பொறாமை,உலகவாழ்வு நிரந்தரமானது என்ற எண்ணம் ஆகியவை மனிதனை ஆட்டி படைக்கின்றான்.

இதையே சைவ சித்தாத்தத்தில் கர்மா, மாயை என்கிறார்கள். இதை அகற்றி ,ஞானத்தை உண்டாகச் செய்வதே பூஜை.

சரஸ்வதி கல்வியாகிய ஞானத்தை தருபவள் என்பதால்,அவளது விழாவை மட்டும் பூஜை என்ற அடைமொழி இணைந்தது .

அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# தர்மர் ஆட்சி

சீதையின் தந்தை ஜனகரின் ஆட்சியில் மக்கள் எந்த வித குறையும் இன்றி மகிழ்வோடு வாழ்ந்து வந்தனர், ஜனகரின் அரச திறனை சோதிக்க எண்ணிய தர்மதேவதை ஒரு பண்டிதர் போல வேடம் தாங்கி ஜனகரிடம் வந்து,

"மன்னா நான் ஒரு தலை சிறந்த பண்டிதன் எனக்கு உன் அதிகாரத்துக்கு உட்பட்ட இடத்தில வசிக்க ஒரு இடம் வேண்டும் கிடைக்குமா என்று கேட்டாள்.

ஜனகர் யோசித்தார்,

நம் அதிகாரத்துக்கு உட்பட்ட இடம் என்றால் இந்த உலகம் முழுவதும் நம் அதிகாரத்தின் கீழ் தான் உள்ளது, ஆனால் இந்த உலகத்தை காக்கும் சக்தி நமக்கில்லை அந்த அந்த தேசத்தை ஆட்சி செய்யும் சிற்றரசர்கள் அல்லவா மக்களை காத்து நல்லாட்சி செய்து வருகிறார்கள்.

அப்படியென்றால் இந்த மிதிலை தேசம் என் ஆட்சி அதிகாரத்தின் கீழ் தான் உள்ளது, ஆனால்என்னோடு சேர்ந்து அமைச்சர்களும் தளபதிகளும் பாக்கிரமிக்க வீரர்களும் என் ஆட்சி நல்லாட்சியாக அமைய துணை புரிகிறார்களே, அப்படி இருக்க என் அதிகார ஆட்சி என்று நான் எப்படி நினைக்க முடியும்.

அப்படி என்றால் நான் வசிக்கும் இந்த அரண்மனையில் மட்டுமாவது என் அதிகாரத்தின் படி ஏதும் நடக்குமா, இல்லை... இல்லை... எதுவானாலும் மஹாராணியிடம் கலந்தாலோசிக்க வேண்டும். வேலை செய்பவர்களின் விருப்பு வெறுப்புகளை தெரிந்து அதன் படிதானே வேலை வாங்க முடியும்.

அப்படியென்றால் என் அதிகாரத்துக்கு கீழ்ப்படிந்து நடப்பது, என் உள்ளமும், உடலும் தானே, ஐயோ அதையும் உறுதியாக சொல்லமுடியாதே நம் மனம் நம் சொல்லையா கேட்கிறது அல்லது நம் உடல் தான் நம் சொல்லை கேட்குமா?

ம்... ம்... ஒன்று நன்றாக புரிந்து விட்டது மனிதனுக்கென்று இந்த உலகத்தில் எந்த அதிகாரமும் இல்லை, எல்லாம் இறைவனின் அதிகார படியே நடக்கிறது.

யோசனையை நிறுத்திய மன்னன், பண்டிதரை பார்த்து,

"பண்டிதரே என் அதிகாரம் என்று எதுவும் இல்லை நீங்கள் உங்கள் விருப்பம் போல் ஒரு காலி இடத்தை தேர்ந்தெடுத்து அதில் வசிக்கலாம்" என்றார்.

"என்ன மன்னா உன் தேசத்தில் கூடவா உனக்கு என்று அதிகாரம் இல்லை" என்று பண்டிதர் கேட்க,

ஜனகர் தன் மனதில் தோன்றியதை பண்டிதரிடம் கூறினார். அதை கேட்டு பண்டிதர் புன்னகைத்தவாறே தன் சுய உருவான தர்மதேவதை உருவமாக ஜனகருக்கு காட்சியளித்து, ஜனகா உன் ஆட்சி திறனை சோதிக்க எண்ணியே பண்டிதர் உருவில் யாம் வந்தோம், உண்மையில் நீ பிரம்மநிஷ்டை கொண்டவன், நீண்ட காலம் நல்லாட்சி புரிந்து அழியா புகழோடு வாழ்வாயாக என்று வாழ்த்தி மறைந்தாள்.

என் கருத்து அதிகாரம் என்பது நம் உள்ளத்திலும் உடலிலும் கூட நம்மால் செலுத்த முடியாமல் இருக்கும் போது மற்ற விஷயங்களில் எப்படி செலுத்த முடியும் அதனால் ஆண்டவன் அருளை பெற்று அடக்கத்துடன் வாழ்வோம்







# பழுதான சாமி படங்களை என்ன செய்யலாம்?

வீட்டில் பழுதடைந்த, உடைந்து போன அல்லது தேய்ந்து போன விக்ரஹங்கள், படங்களை என்ன செய்வது?

இந்த பிரச்சினை, கேள்வி எல்லோருக்கும் இருப்பதே. பல பேர் தங்கள் வீட்டில் பின்னமான விக்ரகங்கள், படங்கள் ஏதோ ஒரு கோவிலிலோ அல்லது சாலையோரத்திலோ, மரங்கள் அடியிலோ போட்டுவிட்டு போய்விடுவதுண்டு. ஆனால் தெரிந்தோ, தெரியாமலோ அப்படி செய்வது மஹா பாபம். மன்னிக்கமுடியாத குற்றம்.

வீட்டில் இருந்தவரை பூஜைகள் செய்து பிறகு அவசியம் இல்லாத பொது, பாழடைந்த வற்றை உதாசீனப் படுத்தக்கூடாது. அப்படி சாலையோரத்தில் உள்ள நமது ஹிந்து தெய்வங் களின் படங்களை பார்த்து இதர மதத்தவர்கள் நம் மதத்தை குறித்து பலவாறாக கிண்டலும், கேலியும் செய்கிறார்கள். அவர்களுக்கு அந்த சந்தர்பத்தை நாம் அளிக்கக்கூடாது. மற்ற மதத்தவரின் தெய்வ படங்களை அது போல் எங்காவது கண்டதுண்டா என்பதை யோசித்து பாருங்கள்.

தயவு செய்து நமக்கு அவசியம் இல்லாத படங்களை, விக்ரஹங்களை அக்னி பகவானுக்கு ஆஹுதி கொடுப்பது (சமர்பிப்பது) நல்லது. அதெப்படி ஸ்வாமி படங்களை அக்னியில் போடுவது சரிதானா என்ற சந்தேகம் உங்களுக்கு வரும். ஆனால் அக்னி பகவான் ஸர்வ பக்ஷகன். எல்லா சமயத்திலும் புனிதமானவர்.

அதனால் பவித்ராக்னியில் ஸ்வாமி படங் களை சமர்பிப்பது தவறில்லை (அல்லது) ஓட்ட முள்ள நதியிலோ, ஏரியிலோ ‘நிமர்ஜனம்’ (கரைத்தல்) செய்யலாம். ஆனால் அக்னி பகவானுக்கு சமர்பித்தாலும், நதியில் போடுவதாக இருந்தாலும், முதலின் அந்த விக்ரஹத்தை/ படத்தை நமஸ்கரித்து “கச்ச கச்ச ஸுரஸ்ரேஷ்ட ஸ்வஸ்தான பரமேஸ்வர” என்று கூறி விடவேண்டும். இதுவும் நிமர்ஜனம் (கரைப்பது) என்பதை தெரிந்து கொள்ளவும்.



# முப்பந்தல் ஸ்ரீ இசக்கியம்மன்

ஆடி மாதம் என்றாலே அம்மனுக்கு உகந்த மாதமாகும், அதிலும் மனிதப்பிறவியாக பிறந்து தெய்வ சக்தி பெற்றவர்களையும் அம்மனாக வழிபடும் நடைமுறை தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதும் வழக்காக உள்ளது.

இவ்வாறு தோன்றி காட்சி தரும் அம்மனை ஒவ்வொரு கிராம தேவதை, எல்லைச்சாமி, போன்ற வரையறைக்குள் வழிபடுவது வழக்கமாகும். இதனால்தான், தமிழகத்தில் லட்சக்கணக்கான அம்மன் கோயில்கள் தோன்றியுள்ளன.

இந்தவகையில், கன்னியாகுமரி நெல்லை தேசிய நெடுஞ்சாலையில், நாகர்கோவிலில் இருந்து சுமார் 16 கி.மீ. தொலைவில் உள்ளது ஆரல்வாய்மொழி. இந்த ஊருக்குக் கிழக்கு எல்லையில் அமைந்திருக்கிறது முப்பந்தல் இசக்கியம்மன் கோயில்.

இந்த அம்மன் ஒரு கிராம தேவதையாக அருள்புரிந்து, அதிக சக்தியால் உலகெங்கும் பக்தர்கள் கூட்டம் பெருகி, தற்போது மிகப்பெரிய முக்கியத்துவம் வாய்ந்த அம்மன் கோவிலாக விளங்குகிறது.

தற்போது இசக்கியம்மன் கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கீழ் உள்ளது.

பூர்வீக கோயிலின் முக்கிய கருவறையில் இசக்கியம்மன் இருக்கிறாள். இந்த சன்னதிக்கு முன் உள்ள மண்டபத்தில், குழந்தை வரம் வேண்டி பக்தர்களால் கட்டப்பட்ட பிரார்த்தனைத் தொட்டில்கள் உள்ளன. இந்த மண்டபத்தை விட்டு வெளியே வந்தால்,முகப்பு மண்டபம். இங்கு கிழக்கு நோக்கி நிற்கிறார் சுடலைமாடன். பூர்வீகக் கோயில், வீடு போன்ற அமைப்பில் உள்ளது.

புதிய கோயில் கோபுரத்துடன் காட்சி தருகிறது. கருவறையில் மூலவ மூர்த்தியாக காட்சி தருகிறாள் இசக்கி அம்மன். இவளுக்கு வலப் புறம் பிராமணத்தி அம்மன். கருவறையின் வெளிச்சுற்றில் விஷ்ணு துர்கை மற்றும் வைஷ்ணவிதேவியை காணலாம். மேற்கு பிரகாரத்தில் வலம்புரி விநாயகர், ஔவையாரம்மன், பாலமுருகன் ஆகியோர் தனிச் சந்நிதிகளில் எழுந்தருளியுள்ளனர். கோயில் முகப்பில் கிழக்கு நோக்கி சுடலைமாடன்; எதிரே பட்டவராயர். கோயிலுக்கு சற்று தள்ளி திறந்தவெளியில் சுமார் 133 அடி உயர இசக்கி யம்மனின் பிரமாண்ட சிலையை தரிசிக்கலாம். இங்கு, திருவிழா கொண்டாட்டம் ஆகியவை இசக்கிக்கு இல்லையெனினும் ஆடி மாதம் கடைசி செவ்வாய்க் கிழமையில் 'ஊட்டு படைப்பு' வைபவம் விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது.

இந்த நாளில்... பகல் முழுவதும் இசக்கியம்மனுக்கும் பிற தெய்வங்களுக்கும் விசேஷ பூஜைகள் நடைபெறும். அப்போது ஔவையாரம்மனுக்கு கொழுக் கட்டைப் படையல் வைத்து, பூஜைகள் செய்வர். அன்று இரவு 12:00 மணிக்குப் பச்சரிசி சாதம் வடித்து பல வகை காய் கறிகளுடன் கூட்டு சமைத்து படையலிடுகின்றனர். அப்போது இசக்கியம்மனுக்கு அருகில் உள்ள பிராமணத்தி அம்மனை பிராமணர்கள் வழிபடுவர். இந்த வைபவத்தின்போது...

இசக்கியம்மனின் அருளால் வேண்டுதல் பலித்த பக்தர்கள், மனித உருவ பொம்மைகளைச் செய்து எடுத்து வந்து அம்மன் வாசலில் வைக்கின்றனர்.

குழந்தை வரம், திருமண பாக்கியம் மற்றும் நோயற்ற வாழ்வு ஆகியவற்றை அருளும் இசக்கியம்மனின் மகிமையை அறிந்த கேரள மக்களும் இங்கு வந்து அம்மனை தரிசனம் செய்து செல்கின்றனர்.



**தல வரலாறு:**

முப்பந்தல் அருகில் உள்ளது பழவூர். இந்த ஊரில் நாட்டிய பெண்மணி ஒருத்தி தனது மகள் இசக்கியுடன் செல்வச் செழிப்பில் வசித்து வந்தாள். அவளது சொத்தின் மீது ஆசை கொண்ட ஒருவன், இசக்கியை காதல் மொழி பேசி வஞ்சனையால் வீழ்த்தினான்.

பின்னர் இசக்கியை வீட்டில் உள்ள நகை பணத்துடன் அருகில் இருந்த காட்டுக்கு வர வழைத்தவன், இசக்கி அவன்பால் கட்டுண்டு இருந்த போது தலையில் பாறாங்கல்லை தூக்கிப்போட்டான். இதில் இசக்கி துடிதுடித்து இறந்துபோனாள்.

பின்னர் அந்தக் கயவன், நகை பணத்துடன் காட்டு வழியாக சென்று கொண்டிருந்தபோது பாம்பு ஒன்று தீண்டியதில் அவனும் இறந்து போனான்.

இந்த நிலையில் தெய்வ பிறவியான இசக்கி, சிவபெருமானிடம் தன்னை வஞ்சனையால் கொன்றவனைத் தானே அழிக்க வேண்டும் என்று வரம் பெற்று மீண்டும் தன்னையும், தன்னை ஏமாற்றியவனையும் உயிர்த்தெழச் செய்யுமாறு வேண்டினாள். சிவனும் வரம் கொடுத்தார்.

கள்ளியை, குழந்தையாக மாற்றி...

அதன்படி பாம்பு தீண்டி இறந்து கிடந்த இசக்கியை கொன்றவன் வீடு திரும்பினான். இசக்கியோ காட்டில் அலைந்து திரிந்தாள். ஒருநாள்,


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com




காட்டில் இருந்த கள்ளிச் செடியை ஒடித்து அதனை அழகிய குழந்தையாக மாற்றி னாள் இசக்கி. பின்னர் அந்த குழந்தையை இடுப் பில் வைத்துக்கொண்டு, தன்னை ஏமாற்றிய கயவனின் ஊருக்கு சென்று பஞ்சாயத்தை கூட்டி, தன்னையும், தனது குழந்தையையும் அவன் ஏற்க மறுப்பதாக புகார் கூறினாள்.

விசாரணைக்கு வந்த இசக்கியை ஏமாற்றிய வன், அவள் தனது மனைவியல்ல, அது என் குழந்தை அல்ல என்று மன்றாடினான். ஒரு கட்டத்தில் இசக்கி தனது இடுப்பில் இருந்த குழந்தையை கீழே இறக்கி விட்டாள். அந்த குழந்தை நேராக, குற்றம் சாட்டப்பட்டவனிடம் சென்று அப்பா என்றது. இதனை பார்த்த பஞ் சாயத்து தலைவர், 'குழந்தை பொய் சொல்லாது, எனவே நீ உன் மனைவியுடன் பேசி ஒரு முடிவுக்கு வா' என்று கூறி ஒரு வீட்டில் இரு வரையும் உள்ளே வைத்து பூட்டி சென்று விட்டனர்.

### முப்பந்தலில் அமர்ந்தாள்:

இந்த நேரத்திற்காக காத்திருந்த இசக்கி, நள்ளிரவு ஆனதும் விஸ்வரூபம் எடுத்தாள். பின்னர் தன்னை ஏமாற்றி கொன்றவனை, தனது கையால் கொன்று பழிதீர்த்தாள். அதன்பிறகு பழவூரை விட்டு, மேற்கு நோக்கி நடந்தாள். அப்போது அவ்வையார் முப்பந்தல் பகுதியில் மூவேந்தர்களுடன் பேசிக்கொண்டிருந்தார்.

அந்த நேரத்தில் அவ்வழியாக சென்ற இசக்கியை அழைத்து, சாந்தப்படுத்தி, 'இனி நீ இருக்க வேண்டிய இடம் இதுதான்' என் றார். இசக்கியும் அங்கேயே தங்கினாள். இதனை கயிலையில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த சிவபெருமான் பார்வதியை நோக்க, உடனே பார்வதிதேவி தன் வீரசக்தியை இசக்கிக்கு அளித்தாள். அன்று முதல் ஊரை காக்கும் தெய்வமானாள் இசக்கி. முப்பந்தலில்



அமர்ந்ததால் முப்பந்தல் இசக்கி அம்மன் என்று பெயர் பெற்றாள்.

### அவ்வைக்கு தனி சன்னிதி:

இசக்கியை, அவ்வையார் சாந்தப்படுத்தியதால் முப்பந்தலில் அவ்வையாரம்மன் என்ற பெயரில் அவ்வைக்கு தனி சன்னிதி உள்ளது. மேலும் இசக்கியின் சகோதரனான நீலனுக்கும் தனி சன்னிதி அமைந்துள்ளது. திருமாலே இசக்கியின் தமையனாக வந்ததாக கூறப்படுகிறது. 'இசக்கி' என்ற சொல்லுக்கு 'மனதை மயக்குபவள்' என்று பொருள்.

முப்பந்தலில் கருவறையில் அம்மன் வடக்கு பார்த்த வண்ணம் காட்சி தருகிறாள். வலதுபுறம் பிராமணத்தி அம்மன் உள்ளார். கருவறை சுற்றுச்சுவரில் வைஷ்ணவி, துர்க்கை, பிரத்தியங்கரா தேவி ஆகியோர் அருள்பாலிக்கின்றனர்.

கோவில் சுற்றுப்பிரகாரத்தில் வலம்புரி விநாயகரும், பாலமுருகனும், அவ்வையாரம்மனும் தனி சன்னிதியில் பாங்குடன் அருள்புரிகின்றனர். முகப்பில் காவல் தெய்வங்களான சுடலைமாடனும், அவருக்கு எதிரில் பட்டவராயரும் தனி சன்னிதிகளில் உள்ளனர்.

### மகிமை நிறைந்த திருஷ்டிக் கயிறு!

இசக்கியம்மன் கோயிலில் சிவப்பு மற்றும் கறுப்பு வண்ணங்களில் திருஷ்டிக் கயிறு வழங்குகின்றனர். 41 நாட்கள், அம்மனின் திருப்பாதத்தில் வைத்து பூஜித்துத் தரப்படும் இந்தக் கயிறைக் கட்டிக் கொண்டால், திருஷ்டி கழியும்; காத்து கருப்பு அண்டாது என்பது நம்பிக்கை! இங்கு, திருநீறுக்கு பதிலாக மஞ் சனையை (தண்ணீரில் குழைத்த மஞ்சள்) வாழை இலையில் மடித்துக் கொடுக்கின்றனர்.

தேசிய நெடுஞ்சாலையில் இசக்கியம்மன் கோயில் கொண்டிருப்பதால், இந்த வழியே செல்லும் வாகன ஓட்டிகள், மறக்காமல் அம்மனுக்குக் காணிக்கை செலுத்தி விட்டுச் செல்கின்றனர். இதனால், தங்களுடன் வழித்துணையாக இசக்கியம்மன் வருவாள் என்பது அவர்களது நம்பிக்கை...



## அக்கினி குண்டத்தில் கருகாத பூக்கள்!

சேலம் அழகாபுரம் பத்தினி தெய்வம் ஸ்ரீ திரௌபதி அம்மன் அக்கினி குண்டத்தின் போது தீ மீது பூக்கள் கொட்டியும் ஒரு பூ கூட கருகாத அதிசயம் நிகழ்ந்தது.

இரண்டு அடி அழ குண்டத்தின் மேல் இருக்கும் பூக்கள். ஒரு நிமிடம் பக்தர்கள் மெய்சிலிர்க்க வைத்து விட்டது...

GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து Aanmeega malar (mobile app) டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர் .காம்


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# மனக்கசப்பை நீக்கி
# காமாக்ஷி தந்த தீர்ப்பு!

தஞ்சாவூர் மாவட்டம் பதினெட்டு க்ராம வாத்திமர் குடும்பம். செல்வ செழிப்பு, ஈசுவர ஆராதனை, பெரியவாளிடம் பக்தி எல்லாம் சேர்ந்திருந்தது.

ஜாதகம் பார்த்து, பெண் பார்த்து, விமர்சை யாக விவாஹம் நடந்தது. மகிழ்ச்சிகரமான இல் வாழ்க்கை.

எந்த க்ரஹம் எங்கே இடம் பெயர்ந்ததோ?

ஸாதாரணமாக தோன்றிய ஒரு அல்ப விவாதம், கணவன் மனைவிக்குள் கசப்பை உண்டாக்கி விவாஹரத்து வரை வந்து விட்டது. விசாரணைகள், ஆலோசனைகள், மறு ஆய்வுகள்

உஹூம்!!!.. எதுவுமே ஒத்து வரவில்லை!

நாளைக்கு தீர்ப்பு! நிரந்தரமாகப் பிரிவதற்கு!

பெண்ணும், பெத்தவாளும், பெரியவா தர்ச னத்துக்கு வந்தார்கள்.

"காமாக்ஷிய மொதல்ல தர்சனம் பண்ணிட்டு வா!"

பெண்ணை மட்டும் அனுப்பினார்.

கோவிலில் எக்கச்சக்க கூட்டம்!

அத்துடன் பக்திபூர்வமாக தர்சனம் செய்யும் மனநிலையில் அவளும் இல்லை.

தெரிந்தவர் ஒருவர் எதிரே வந்தார்.

"அடேடே! ஏது இன்னிக்கி இவ்ளோவ் தூரம்?"

"பெரியவா சொல்லிட்டா...! அதுனால வந்தேன்"

அம்பாள் பேருக்கு அர்ச்சனை செய்வதற்காக அர்ச்சனை தட்டை ஸ்தானீகரிடம் கொடுத்தாள்.

ஸ்தானீகர் அர்ச்சனை செய்துவிட்டு, ப்ரஸாத தட்டை கொண்டு வந்தார்.

கூட்டமான கூட்டம் !

"சேர்ந்து வாங்கிக்கோங்கோ"

சேர்ந்தா??.

அந்தப் பெண் முழித்தாள்!

"நான். தனியாத்தான் வந்தேன்"

"அதுனால என்ன? ரெண்டு பேருமா சேந்து வாங்கிக்கோங்கோ"

மறுபடி அர்ச்சகர் சொன்னதும், "யாரோட சேர்ந்து வாங்கிக்கச் சொல்றார்?"

சட்டென்று திரும்பிப் பார்த்தபோது

அங்கே அவளுடைய பிரியப்போகிற புருஷன் தான், அவள் பின்னால் நின்று கொண்டிருந்தான்!

"சேர்ந்து வாங்கிக்கோங்கோ"

மறுபடியும்!

"அம்மா! பரதேவதே! காமாக்ஷி! இது... உன்னோட ஆணையா?"

கண்கள் கண்ணீரைப் பெருக்க, இருவருமே உண்மையில் ஆத்மார்த்தமாக இதைத்தான் விரும்பியதால், இதற்காகவே ஏங்கிக் கொண் டிருந்ததால், ஸந்தோஷமாக ப்ரஸாதத்தைப் பெற்றுக் கொண்டனர்.

கர்ப்பக்ருஹத்துக்குள் காமாக்ஷி தீபத்தின் ஜோதியில் ஜொலித்துக் கொண்டிருந்தாள்!

"இப்படி அழுது, அழுது பிரிந்து போவதற்காகவா உங்களை சேர்த்து வைத்தேன்?" என்று கேட்பது போல் புன்னகையோடு காட்சியளித்தாள்.

மனஸ் முழுக்க ஸந்தோஷத்தை நிரப்பிக் கொண்டு ரெண்டு பேரும் கோவிலிலிருந்து வெளியே வந்த பிறகு, இரண்டு குடும்ப பெரியவர்களும் பார்த்து பேசி கொண்டார்கள்.

விவாஹரத்து

ரத்தாகி விட்டது.!!

காமாக்ஷி அல்லவா ஜட்ஜ்மென்ட் கொடுத் திருக்கிறாள்!

ஸ்ரீமடத்துக்கு வந்து, பெரியவா திருவடிகளில் விழுந்து எழுந்தார்கள்.

"என்ன? ஜட்ஜ்மென்ட் வந்துடுத்து போலி ருக்கே?"

எவ்வளவு புஷ்டியான சொற்கள்!!!

"எழுதினது, பெரியவாதானே!"

பெண் மனஸு நிறைந்து சிரித்துக் கொண்டே சொன்னாள்.



ஸுந்தரமூர்த்தி நாயனாருக்கும், பரவை நாச்சியாருக்கும் நடுவே தூது போன ஞாபகம் இன்னும் இந்த பரமேஸ்வரனுக்கு இருந்திருக்கிறது. அதனால்தான் கணவன், மனைவி இருவரையும் தனியாக கோவி லில் ஸந்திக்க வைத்திருக்கிறார்.

அதோடு, தாய்க்கும் மேலாக, தன் குழந்தைகளான நமக்கும், இனி வரப்போகும் ஸந்ததிகள் எல்லா ருக்குமாக உபதேஸித்தார்..

"பாருங்கோ! வாழ்க்கைன்னா. ஆயிரம் கஷ்ட நஷ்டம் வரத்தான் வரும். குடும்பம்ன்னா. சண்டை சச்சரவு இருக்கத்தான் செய்யும். பொறு மையா ஒத்தரோட ஒத்தர் அனுஸரிச்சு போனா. எப்பேர்ப்பட்ட ப்ராப்ளத்தையும் ஈஸியா solve பண்ணலாம்.

அல்ப விஷயத்துக்கெல்லாம் பெரிய சண்டை யைப் போட்டுண்டு, விவாஹ ரத்து பண்ணிக்கறதுக்கா, இத்தனை செல வழிச்சு கல்யாணம் பண்றா?

..அல்ப மனஸ்தாபத்துக் காக, நீயா? நானா?ன்னு ego clashனால, வேத மந்த்ரங்களோட, அக்னியை ஸாக்ஷியா வெச்சுண்டு, நாள் நக்ஷத்ரம் பாத்து பண்ற கல்யாணத்தை, யாரோ வக்கீல்கள், அவாளுக்குள்ள பேசிண்டு, argue பண்ணிண்டு, அதுக்கு ஒத்தர் ஜட்ஜ்மெண்ட் குடுத்து பிரிச்சு வெக்கறான்னா, அப்றம் நம்ம வேத மந்த்ரங்களுக்கு என்ன மதிப்பு? அக்னி பகவானுக்கு என்ன மதிப்பு? இல்ல. பத்ரிகைல 'ஆச்சார்யாள் அனுக்ரஹத்தோட' அப்டீன்னு போடறேளே, எங்களுக்கு என்ன மதிப்பு?"

எத்தனை ஸத்யமான வார்த்தைகள்!

இரண்டு பேரும் மனமொத்த தம்பதிகளாக மறுபடியும் நமஸ்காரம் பண்ணினார்கள்.

ஸ்ரீ ஆசார்யாள் பாதங்களில் ஸமர்ப்பணம்

- by Gowri Sukumar



# ஒருமுறை அழைத்தால் ஏழுமுறை கேட்கும் அதிசய கோயில்

திருக்கைலாய மலை சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் இடமாக கருதப்படுகிறது. அப்படிப்பட்ட திருக்கைலாயத்திற்கு சென்று வழிபடுவது எல்லோராலும் இயலாத காரியமாகும், அப்படிப்பட்டவர்கள், திருவையாறில் உள்ள ஐயாறப்பன் கோயிலுக்கு சென்று ஈசனை வணங்கினால் கயிலை நாதனின் அருள் கிடைக்கும் என்பது ஐதீகமாகும்.

கிமு முதலாம் நூற்றாண்டில் ஆட்சிசெய்த கரிகால் பெருவளத்தான் என்ற சோழ பேரரசன் இமயவரம்பில் புலிக் கொடி பதித்து. வெற்றியுடன் நாடு திரும்பும் வழியில் ஐயாற்றை கடக்கும்பொழுது அவர் வந்த தேரின் சக்கரங்கள் பூமியில் புதைந்து நகர மறுத்துவிட்டது. எவ்வளவோ முயன்றும் தேர் கால்கள் நகராததால் ஏதோ ஒரு சக்தி ஈர்க்கிறது என்பதை உணர்ந்த கரிகாலன் அந்த இடத்தை தோண்ட ஆணையிட்டார்.

அந்த இடத்தை தேடிய போது அதன் அடியில் சுயம்பு லிங்கம் ஒன்று தென்பட்டது. அதோடு நீண்ட சடைமுடியை கொண்ட நியமேசர் என்ற சித்தரும் தோன்றினார். அவரின் பாதம் பணிந்த சோழனுக்கு ஆசி வழங்கிய நியமேச முனிவர் தேவர்களும், நந்தீசரும் வழிபட்ட சுயம்பு லிங்கத்திற்கு கோயில் எழுப்பி வழிபடுமாறு கூறினார்.

அதை ஏற்றுக்கொண்ட சோழ மன்னன் மிகச் சிறப்பான வகையில் கோயில் கட்டினார். கரிகால் சோழனுக்கு சிவபெருமானே சித்தரின் வடிவில் வந்து சுயம்பு லிங்கத்தை காட்டி கோயில் கட்ட செய்தார் என்று மக்களால் நம்பப்படுகிறது.

இந்த கோயிலின் கருவறைக்கு பின்புறம் சிவப்பெருமானின் ஜடாமுடி பரந்து விரிந்து இருப்பதாக ஐதீகம். எனவே சிவபெருமானின் ஜடாமுடியை யாரும் மிதித்துவிடக்கூடாது என்ற காரணத்திற்காக இந்த கோயிலில் சன்னதியை சுற்றிவர தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் இத்திருத்தலத்தின் வெளிபிரகாரத்தில் ஒரு இடத்தில் நின்று ஐயாறப்பா என்று குரல் கொடுத்தால் அது ஏழு முறை திரும்பி கேட்கும் அளவிற்கு இந்த கோயிலின் கட்டிடக்கலை நுட்பமாக அமைக்கப்பட்டுள்ளது. இந்த சத்தம் கேட்கும் அதிசயத்தை ஆய்வு செய்ய வெளிநாட்டில் இருந்து பல கட்டடக்கலை நிபுணர்கள் வந்து ஆய்வு செய்தும் இதற்கான காரணத்தை கண்டறிய முடியவில்லை என்பது இந்த கோயில் இருக்கும் பேரதிசயமாகும்.





# செவ்வாய்யும் முருகனும்

முருகனுக்கும் செவ்வாய்க்கும் உண்டான தொடர்ப்பு என்ன? ஏன் செவ்வாய் சமந்தப்பட்ட எந்த பிரச்சனை என்றாலும் முருகனை சென்று வழிபடுங்கள் என்று கூறுகிறார்கள்?

முதலில் செவ்வாய் என்ற கிரகத்தின் நிறம் என்ன (Colour of mars planet) அனைவரும் அறிந்தது தான் சிகப்பு ஆம் செவ்வாய் கிரகம் சிகப்பு நிறத்தை உடையது.அதை போல் முருகனுக்கு சங்க இலக்கியத்தில் சொல்லப்பட்ட பெயர் என்னவென்றால் சேயோன் இந்த சேயோன் என்ற சொல்லுக்கு பொருளே சிவந்தவன் தான். ஆக செவ்வாய் என்ற கிரகத்தின் நிறமும் சிகப்புதான் இங்கு முருகனும் சிவந்தவன் தான்.

அதுமட்டும் இல்லாமல் செவ்வாய் என்பது நெருப்பை குறிக்கும். இங்கு நம் கதைகளில் முருகனின் பிறப்பை பற்றி கூறும் போது அவன் சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து வெளிப்பட்ட தீ (நெருப்பு)யில் இருந்து பிறந்தவன் என்றே உள்ளது. அது மட்டும் இல்லாமல் சிவந்தவன்(சேயோன்)என்ற சொல்லின் அர்த்தமே நெருப்பின் கூறாக நின்று உலகத்தை இயக்கும் இறைவன் என்பதே.

அடுத்ததாக ஜோதிடத்தில் செவ்வாய்யின் குணங்கள் என்று சொல்லப் படுவது போர் செய்வது வேகம் கோபம் அதாவது ஜோதிடத்தை பொ ருத்தவரை செவ்வாய் தான் போர்வீரன் வேகத்திற்கும் கோபத்திற்கும் சொந்தக் காரன்.இங்கே முருகனையும் நாம் போர் கடவுளாகதான் வணங்குகிறோம் அதுமட்டும் இல்லாமல் முருகன் வேகமானவன்(மயில் வாகனம்) உக்கிர மானவன்(கடும் கோபகாரன்). என்பது நாம் அறிந்ததே.



வான்மண்டலத்தில் உள்ள முதல் இராசி மேஷம் அந்த மேஷ இராசிக்கு சொந்தக்காரர் செவ்வாய் என்னும் கிரகம்.அந்த இராசியின் குறியிடு (Symbol) ஆடு. செவ்வாயின் வாகனமும் ஆடு தான் அதைபோல் முருகனுடைய பழைய வாகனமும் ஆடே அதன் பிறகு தான் முருகனுக்கு மயில் வாகனம் வந்தது.

செவ்வாய் என்ற கிரகம் ஒருவரின் ஜாதகத்தில் பலம் குறைந்திருந்தால் அதை பலப்படுத்த பரிகாரம் என்னவென்றால் செவ்வாய்கிழமை அன்று மலைகளுக்கு மேல் சென்று மூச்சிபயிற்சி செய்தால் செவ்வாய் பலம்பெற்று விடுவார்.

இயற்கையாகவே நம் ஊர்களில் மலைமேல் எல்லாம் முருகன் கோவில்களே உள்ளன (குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடம்). இதில் நீங்கள் கவனிக்க வேண்டியது என்னவென்றால் செவ்வாயை பலப்படுத்தவும் மலைக்கு மேல் தான் செல்ல வேண்டும் முருகனை வழிபடவும் மலைக்கு மேல் தான் செல்ல வேண்டும். நாம் முருகனை வழிபட மலைக்கு மேல் உள்ள முருகன் கோவிலுக்கு சென்றாலே செவ்வாய்யும் தானாகவே வலுபெற்றுவிடும் என்பதே உண்மை. ஒருவேலை முருகன் கோவில்களை மலைக்கு மேல் கட்டியதுக்கு இதுவும் கூட ஒரு காரணமாக இருக்கலாம்.

இன்னொரு விசயம் என்னவென்றால் செவ்வாய்யின் கதிர்வீச்சு பூமியில் அதிகமாக விழும் இடங்கள் மலைகள்.அந்த மலைகள் எங்கும் முருகன் கோவில்கள் குறிப்பாக பழனி மலையில் தான் செவ்வாய்யின் கதிர்வீச்சு அதிகபடியாக விழப்படுகிறது என்று கூறப்படுகிறது.

செவ்வாய்க்கும் முருகனுக்கும் இவளவு ஒற்றுமை இருப்பது னால் தான் செவ்வாயின் கடவுளாக முருகனை நியமனம் செய்துள்ளனர்.

– கோகுல மணிகண்டன் சான்றார்

தொடர்பு எண்: 09677359474

# சமயவிஞ்ஞானம்

இந்தக் கட்டுரை எவ்வாறானது என்பதை வாசகர்களுக்கு எடுத்துக்கூற நான் விரும்புகிறேன். கிழக்கத்திய உளவியல் மற்றும் சமயத்தைப்பற்றிய தற்போதைய ஆர்வத்திற்கு பல்லாண்டுகளுக்கு முன்பு, ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் (1893–1952) இந்தியாவின், காலத்தை வென்ற ஆன்மீக விஞ்ஞானத்தை மேலை நாடுகளுக்குக் கொண்டு செல்லும் தனது வாழ்நாள் பணியை துவக்கினார்.

1920–ல், பாஸ்டனில் நடைபெற்ற உலக சமயத் தலைவர்களின் சர்வதேச கலந்தாய்வுக் கூட்டத்திற்கு இந்தியாவின் பிரதிநிதியாக அமெரிக்காவிற்கு அழைக்கப்பட்டார். அந்த சந்தர்ப்பத்தில் அவர் ஆற்றிய சொற்பொழிவு, அமெரிக்காவில் அவருடைய முதற்பேச்சு, அதன் பிறகு ‘சமய விஞ்ஞானம்’ என பிரசுரிக்கப்பட்டது. அதற்குப்பின் மேலும் ஏழு மொழிகளில் பிரசுரிக்கப்பட்டு அத்துடன் கல்லூரிகளிலும் பல்கலைகழகங்களிலும் ஒரு குறிப்பு நூலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சமய விஞ்ஞானம் எல்லா உண்மையான மதங்களுடைய பொதுவான இலக்கு மற்றும் அதற்கு அழைத்துச் செல்லும் நான்கு முக்கியமான வழிமுறைகளைப் பற்றி மிகவும் தெளிவான மற்றும் சுருக்கமான விளக்கமாகும். இது வெறும் சம்பிரதாய நம்பிகைகளை மட்டும் சார்ந்திராமல், மாறாக புராதன விஞ்ஞான, தியான உத்திகளின் பயிற்சியின் வாயிலாக பெறப்படும். இறைமெய்ம்மையை அறிவதற்கான நேரடி உள்நோக்கை அடிப்படையாகக் கொண்ட உலகளாவிய செய்தியாகும். அவருடைய சொற்பொழிவு கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பேரானந்த உணர்வுநிலை மட்டுமே பயனளிக்கும் வகையில் மனக்கிளர்ச்சியை அமைதியாக்க முடியும்.

குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் அருளுகிறார்: “நாம் செய்ய வேண்டியது என்னவெனில், ஆசையில் உள்ள மனக்கிளர்ச்சியை அமைதியாக்குவதும், மகிழ்ச்சியில் உள்ள மனக்கிளர்ச்சியின் மூலம் அதனை விசிறி விடாமலோ அல்லது தொடராமலோ இருப்பதுமே



யாகும். இந்த அமைதியாக்குதல் என்பது பேரானந்த உணர்வு நிலையின் மூலமாக மட்டுமே பயனளிக்கும் வகையில் சாத்தியமாகும். இது இரக்கமற்ற தன்மையல்ல. மாறாக, இன்பம் மற்றும் துன்பம் ஆகிய இரண்டையுமே பொருட்படுத்தாத மிக உயர்ந்த நிலையாகும். ஒவ்வொரு மனிதரும் ஆசையைப் பூர்த்தி செய்துகொள்வதன் மூலம் பேரானந்தத்தை அடையவிழைகிறார்.

ஆனால் அவர் தவறுதலாக இன்ப நிலையிலேயே நின்று விடுகிறார். எனவே அவரது ஆசைகள் ஒருபோதும் முடிவுறுவதில்லை. அத்துடன் துன்பமெனும் பெரிய நீர்க்சுழியினுள் அவர் இழுத்துச் செல்லப்பட்டுவிடுகிறார்.

“இன்பம் என்பது அபாயகரமான எட்டமுடியாத இலக்காகும். ஆயினும் இந்த இன்பமளிக்கும் தொடர்புதான் எதிர் கால செயல்களுக்காக நமது நோக்கமாக ஆகிறது.

இது பாலைவனத்தில் உள்ள கானல் நீரைப்போன்று ஏமாற்றும் இயல்புடையாதாக இருப்பதை நிரூபித்துள்ளது மகிழ்ச்சியானது.

முன்பு கூறப்பட்டது போல், மனக் கிளர்ச்சி உணர்வுநிலையையும், அத்துடன் துன்பம் இனியில்லை எனும், மாறுபட்ட உணர்வு நிலையையும் பெற்றிருப்பதால், பேரானந்தத்திற்குப் பதிலாக அதனை நாம் இலக்காக்குகிறோம். இதன் காரணமாக ஒருபோதும் முடிவுறாத அடுத்தடுத்து வரும் இன்பதுன்பத்தைக் கொணருகிற அறிவீன வாழ்வு எனும் சுழற்சியினுள் தலைகுப்புறபாய்வதற்காக நம்மை நாம் தயார்செய்து கொள்கிறோம். நமது பார்வைக் கோணப் பேரானந்தத்திலிருந்து இன்பத்திற்கு மாறிய காரணத்தால் பயங்கர துயரில் நாம் வீழ்கிறோம்.”

“இவ்வாறு மனித இனத்தின் உண்மையான குறிக்கோள், துன்பத்தைத் தவிர்த்தல், பேரானந்தத்தை அடைதல் என்று இருந்தபோதிலும், மனிதன் ஒரு பயங்கர தவறின் காரணமாக, துன்பத்தைத் தவிர்க்க முயற்சி செய்து கொண்டிருக்கையில் மயக்குகின்ற இன்பம் என பெயரிடப்பட்ட ஒன்றை, அதனைப் பேரானந்தம் எனத் தவறாகக் கருதியபடி பின்தொடர்ந்து செல்வதை நாம் காண்கிறோம்.”

“இன்பத்தை அன்றி பேரின்பத்தை அடைவதே உலகளாவியதும் மிக உயர்ந்துமாகிய தேவையாக உள்ளது என்பது மனிதன் ஒருபோதும் இன்பத்திற்குரிய ஒரு பொருளோடு திருப்தியுறுவதில்லை என்ற உண்மையின் மூலம் மறைமுகமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அவன் எப்போதும் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குப் பறக்கிறான். பணத்திலிருந்து ஆடை அணிகலன்களுக்கு ஆடை அணிகலன்களிலிருந்து சொத்துக்களுக்கு அதிலிருந்து மணவாழ்க்கை இன்பத்திற்கு ஓர் ஒய்வற்ற தொடர்ச்சி. மேலும் அதனால் முறையான வழிவகைகள் என அவன் கருதுவதை மேற்கொள்வதன் மூலம் துன்பத்தைத் தவிர்ப்பதற்கு அவன் விரும்பினாலும்கூட அவன் இடைவிடாது துன்பத்தினுள் வீழ்ந்து கொண்டிருக்கிறான். இருப்பினும் அறிந்திராத மற்றும் திருப்தியடையாத ஓர் ஏக்கம் அவனது இதயத்தில் என்றென்றுமாக நீடித்திருக்கிறது. ஆனால் சமய ரீதியான ஒரு மனிதன் (நான் காண்பிக்கப்போகும் இரண்டாவது உதாரணம்) முறையான சமய வழிவகைகளைப் பின்பற்றுவதை எப்போதும் விரும்புகிறான். அதன் மூலம் பேரானந்தத்துடனோ அல்லது இறைவனுடனோ தொடர்பு கொள்ள அவரால் இயலும்.”

மேலும் அவர் கூறுகிறார்: “பேரானந்தம் இறைவன் என நான் கூறுகிறபொழுது அவன் என்றும் உள்ளவன் மற்றும் அவன் தனது ஆனந்தமயமான இருப்பு குறித்த உணர்வுடனும்கூட உள்ளான் என்றும் கூட நான் பொருள்படுகிறேன். இறைவனை நாம் விரும்புகிறபொழுது பேரானந்தத்துடன் கூடவே சாசுவதமான, அழிவற்ற, மாறுபாடற்ற, என்றும் உணர்வுடைய இருப்பை விரும்புகிறோம் என்பது குறிப்பாக

64 பாகம்
பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்
மனித வாழ்வு மேம்படுவதற்காக


ஆன்மிகமலர் மெயில் புக்

உணர்த்தப்படுகிறது. உயர்ந்தவரிலிருந்து தாழ்ந்தவர் வரை நாம் அனைவரும் பேரானந்தத்தில் இருக்க வேண்டும் என ஆசைப்படுகிறோம் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

"சற்றே மாறுபட்ட ஒரு வழியில் வாதத்தை மீண்டும் முன்வைத்தால் வெளி உலகத்திலிருந்து ஓர் உயர்ந்த ஜீவன் நம்மிடம் வந்து உலகத்திலுள்ள அனைத்து மனிதர்களிடமும், "உலகின் உயிரினங்களே! நான் உங்களுக்கு நிரந்தரமான வாழ்க்கையுடன் கூடவே நிரந் தரமான துன்பங்களையும் துயரத்தையும் தருவேன்; என்று கூறினால் நீங்கள் அதனை ஏற்றுக்கொள்வீர்களா? எவராவது அந்த வாய்ப்பினை விரும்புவார்களா? ஒருவரும் விரும்பமாட்டார்கள்.

அனைவரும் சாசுவதமான பேரானந்தத்துடன் கூடிய சாசுவதமான இருப்பை விரும்புகின்றனர். உண்மையில் உலக நோக்கங்களை கருத்தில் கொண்டால் பேரானந்தத்தைத் தவிர வேறெதையும் எவரும் விரும்பவில்லை என்பதைக் காட்டுகிறது. அதைப் போன்றே அழிகின்ற வாய்ப்பை எவரும் விரும்புவதில்லை; இவ்வாறு யோசனை கூறப்பட்டால், அந்த எண்ணத்திற்கு நாம் நடுங்குகிறோம். அனைவரும் நிரந்தரமாக இருப்பதற்கு விரும்புகின்றனர்.

ஆனால் சாசுவத மான இருப்பு, அந்த இருப்பு குறித்த உணர்வுநிலை இல்லாதவண்ணம் நமக்கு அளிக்கப்பட்டால், நாம் அதனை நிராகரிப்போம். ஏனெனில் உறக்கத்தில் உள்ள இருப்பினை விரும்பி ஏற்றுக்கொள்பவர் யார்? எவருமில்லை. நாம் அனைவரும் உணர்வுடன் கூடிய இருப்பையே விரும்புகிறோம்."

"மொத்தத்தில் நாம் சாசுவதமான, பேரானந்தமயமான, உணர்வுபூர்வமான இருப்பினை விரும்புகிறோம்: சத் சித் ஆனந்தம் (இருப்பு உணர்வுநிலை பேரானந்தம்) அதுவே இந்து மதத்தில் இறைவனுடைய திருநாமம். ஆனால் நடைமுறைக்கேற்ற ஒரு கருத்தின்படி மட்டுமே சத் மற்றும் சித். அதாவது உணர்வுடன் கூடிய இருப்பு என்ற அம்சங்களை விடுத்து (இறைவனின் பிற அம்சங்கள் இங்கு குறிப்பிடப்படவில்லை) இறைவனது ஆனந்தமயமான அம்சத்தையும், பேரானந்தத்திற்கான நமது நோக்கத்தையும் நாம் வலியுறுத்துகிறோம்."

குருதேவர் அருளியவாறு நாம் ஒவ்வொருவரும் துன்பத்தை விரும்புவதில்லை. மாறாக பேரின்பமயமான, ஆனந்தமயமான வாழ்க்கை

**சுதந்திரம் என்றால் தன் விருப்பத்திற்கு ஏற்றவாறு செயல்படுவதன்று. மாறாக இறைவனின் விருப்பப்படியே அவனுடைய வழிகாட்டுதலுக்கிணங்க வாழ்க்கை நடத்துவதுதான் 'சுதந்திரம்' எனப் பொருள்.**

யைத்தான் விரும்புகிறோம். அதை எவ்வாறு பெறுவது? ஓர் இறைபக்தன், இறைவனைச் சரணடைந்தால் அவனுடைய குடும்ப வாழ்க்கைப் பொறுப்புகள் முழுவதையும் இறைவனே ஏற்றுக் கொண்டு உடனிருந்து அனைத்தையும் செய்ய ஆரம்பிப்பான். முதலில், இதுவே அந்தத் தீவிர இறைபக்தனுக்குக் கிடைக்கும் முதல் பேரானந்தமேயாகும். ஏனென்றால், அவை இறைவனால் கிடைக்கப் பெறுவதேயாகும்.

அந்த பக்தனுடைய குடும்பத்தில் நிகழும் அத்துனை நிகழ்வுகளிலும் இறைவனின் தலையீடு இருக்கும். அது எவ்வாறெனில் முதலில் இறைவன் தன் பக்தனை சுதந்திரனாக்குகிறான். இறைவன் அவனுக்கு தாசனாகிறான். எப்படியென்றால் இறைவன் தன் பக்தனுக்கு வழிகாட்டுகிறான்.

அவ்வாறான வழிகாட்டுதல் ஏற்பட்டாலே, பக்தன் சுதந்திரனாவதுடன். அவனுடைய கர்மாவும் துடைக்கப்படுகிறது. சுதந்திரம் என்றால் தன் விருப்பத்திற்கு ஏற்றவாறு செயல்படுவதன்று. மாறாக இறைவனின் விருப்பப்படியே அவனுடைய வழிகாட்டுதலுக்கிணங்க வாழ்க்கை நடத்துவதுதான் 'சுதந்திரம்' எனப் பொருள். அப்பொழுது தானாகவே எல்லா பொறுப்புகளிலிருந்தும் பக்தன் விடுபடுகிறான்.

தன் கடமைகளை இறை அனுமதியுடன் செய்து முடிக்கிறான். பின்னர் அவன் இறைவனால் விடுவிக்கப்படுகிறான்.

இறைவனே அவனுக்கு எல்லாவற்றையும் உணர்த்திக்கொண்டிருப்பான். ஒரு சாதாரண மனிதன் தன் நண்பனிடத்தில் அன்பு வைத்தால் சில சமயங்களில் அந்த நண்பன், தன் நண்பனுக்குச் செய்ய வேண்டிய கடமைகளை மறந்து விடுகிறான். ஆனால் இறைவன் அவ்வாறன்று. குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் எல்லா பொறுப்பான பணிகளையும் செய்து முடிப்பான் இறைவன். அப்படியென்றால் எல்லா பணிகளையும் இறைவன் தன் பக்தனை செய்யவைப்பான்.

இவ்வளவும் நடக்கும்போது பக்தனுக்கு என்ன வேலை இருக்கிறது? அடுத்து அந்த பக்தன் சாசுவதமான பேரானந்த நிலைக்கு கொண்டு செல்லப்படுகிறான். ஒரு தீவிர இறைபக்தனின் முதன்மையானதும் முக்கியமானதுமான நிலை இதுவேயாகும். பக்தனின் உடனிருந்து பணிகளைச் செய்வதும் பக்தனை பேரானந்தத்திற்கு அழைத்துச் செல்வதும் இறைவனே. இறைவனை நேசிக்கும் ஒரு பக்தன் அடைய வேண்டியது சாசுவதமான பேரானந்தத்தைத்தான். அதற்காக அவனுடைய வாழ்க்கையிலுள்ள சிக்கல்கள் அனைத்தையும் அகற்றி விடுகிறான் இறைவன்.

நினைத்த உடன் யாருக்கும் பேரானந்தம் கிடைக்கப்பெறுவதில்லை. வாழ்க்கையிலுள்ள சிக்கல்களைத் தீர்த்து அமைதியான நிலையை அடையும்போதுதான் குருதேவர் கூறியுள்ள பேரானந்தத்தை அடைய முடியும் உதாரணமாக, 'ரிஷி மூலம்' 'நதி மூலம்' இவற்றைப் பார்க்கக்கூடாது என்பர். ரிஷிமூலம் என்றால், ஒரு மனிதன் தன்னுடைய வாழ்நாளில் இறைவனை அடைகிறான் என்று வைத்துக்கொள்வோம். அந்த மனிதன், நினைத்த உடனேயே அது கிடைக்கபெறுவதில்லை என்பது உறுதி. அந்த மனிதனுடைய வாழ்க்கையின் தொடக்கம் முதல் ஆராய்ந்துப் பார்த்தால்தான் அவர் எவ்வளவு துன்பங்களையெல்லாம் கடந்து வந்துள்ளார் என்பது தெரியவரும். சேறும் சகதியுமாக இருந்த வாழ்க்கையை கடந்து தெளிந்த பாதையை அடைகிறார். அதன் பின்னர்தான் ரிஷி ஆகிறார். ரிஷியின் மூலத்தைப் பார்க்காமல், ரிஷியான பின்னர் பார்த்தால் மற்றவர்களும் பயனடையலாம்.

'நதிமூலம்' என்றால் என்ன என்று பார்க்கலாம். ஊரில் ஓடிக்கொண்டிருக்கும் ஆற்று நீரைப் பருகலாம். அதே சமயம் அதன் உற்பத்தி ஸ்தானத்திற்குச் சென்று அந்த நீரை பருக முடியுமா? முடியாது.. ஏனென்றால் அங்கே மிகவும் அழுக்குடைய நீராக இருக்கும் என்பார்கள். அந்த நீர் மலைகள் வழியாக வெகுதூரம் ஓடி ஓடி சமதளத்திற்கு வரும்போது அமைதியாக ஓட ஆரம்பிக்கின்றது. அதன் பின்னர் தெளிந்த நீராக மாறுகிறது. இவ்வாறு அமைதியாக ஓடி தெளிந்த நீராக மாறும்போது அந்த நீர் அனைவரும் பருகப் பயன்படுகின்ற நீராக மாறுகிறது.

அதுபோன்று இறைவனைத் தேடி ஓடுகின்ற ஓர் ஆத்மாவின் வாழ்க்கையைப் பார்த்தாலும் இவ்வாறுதான் இருக்கும். அந்த இறைபக்தன் பல இன்னல்களையும் அவமானங்களையும் அனுபவித்து கூனிகுறுகி, சிந்தித்துத் தெளி வடைகிறான். தனது நன்மைக்காகத்தான் இவற்றையெல்லாம் அனுபவிக்க வேண்டி வந்துள்ளது என்று உணர்ந்து உறுதி கொள்கிறான். அவ் வாறு உணர்ந்து உறுதி கொண்ட மனிதன் அமைதியாக இருக்க தீவிர வைராக்கியம்கொள்வான். இவ்வாறான நிலையிலுள்ள ஒரு மனிதன், குருதேவர் கூறியவாறு சாசுவதமான பேரானந்தத்தை அடைவதற்குத் தயாராகிவிடுகிறான். இறைவனை மட்டும் உண்மையாக நேசிக்கின்ற எவரும் மேலே கூறப்பட்டுள்ள நிலையை அடையமுடியும் என்பது உறுதி.

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909

மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com
இணையதளத்தில் இலவசமாக
டவுன்லோடு செய்தும் படிக்கலாம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.N.ராஜா
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர்,
சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033

# அதிகமாக பாடுபடு, குறைவாக அனுபவி. அழகாக சேமித்து வை, தத்துவத்தோடு செலவழி

❖ தொழிலின் வெற்றி என்பது உலகச் சந்தையில் தங்கத்தைப் போன்றது. தங்கச்சந்தை சரியாக இருந்தால் ஆரோக்கியமான பொருளாதாரம் அங்கே நிலவும். அதனது பாராட்டுதலும் வெற்றியும் பாடுபடுகின்ற மனிதனிடத்தில் இருக்கின்றது.

❖ உண்மையான செழிப்பு என்பது ஒவ்வொரு நாட்டின் மண்ணிலே புதைந்து கிடக்கிறது. புதைந்துள்ள இத்தன்மையைத் தோண்டி எடுத்துக்காட்டுவதே நாட்டுக்கு நாடு ஒவ்வொருவரும் செய்து கொள்ளுகின்ற ஒரு நல் உடன்படிக்கை ஆகும். உனது உடன்படிக்கைக்கு யார் வந்து வேலை செய்யப் போகிறார்கள்? ஒவ் வொரு தனிமனிதனும் ஆணும் பெண்ணுமே தங்களது தொழிலையும் உடன் படிக்கையையும் செய்து கொள்ளுகிறார்கள்.

❖ அதிகமாக பாடுபடு, குறைவாக அனுபவி. அழகாக சேமித்து வை, தத்துவத்தோடு செலவழி. செலவழிப்பது எப்பொழுதுமே மனிதனின் இயற்கைத் தன்மை அல்ல. இதை உணருவதே ஒரு ஆரோக்கியமான குறிப்பு.

❖ ஒரு மனிதன் சம்பாதிப்பதும் அதை ஒன்பது பேர் அமர்ந்து சாப்பிடுவதும் ஒரு மனிதனை மற்றொரு மனிதன் உறிஞ் சுகின்ற நிலை ஆகும். இதுவே இந்தியாவின் எரிமலை ஆகும்.

மனிதன் எப்பொழுது உழைப்பை மறுக்கிறானோ அங்கெல்லாம் எந்தப் பொருளதாரக் கொள்கையும் வெற்றி பெறுவதில்லை. இதுவே மனித வர்க்கத்தினர் ஜீரணிக்கின்ற கொள்கை ஆகும்.

❖ முதலாளி தத்துவவாதிகள் எப்போதும் பொதுவுடைமைவாதி களுக்கு தேவைப்படுகின்றனர். பொதுவுடைமைவாதிகள் உழைப்பை போதிக்க நிச்சயம் வேண்டும். அதுபோல வேலை உயிருக்கும் நமக் கும் அவசியமானதே.

❖ அன்றலர்ந்த மிகப்பெரிய மலர்த்தோட்டத்திற்கு ஒப்பானது இளைய தலைமுறை யினரின் திருவிழா. இந்த இளமை குதூகலத்தை நாம் வளர்க்க வேண்டும். இளமையின் வண்ணவிரி பூங்கோலம் பார்ப்பதற்கு மிக உயர்வானது. திருப்தி அடைய ஏதுவானது. நமது நாட்டின் இளைஞர்களையும் அவர்களின் சரியான பருவத்தையும் நாட்டிற்கும் அவர்களின் முன்னேற்றத்திற்கும் உபயோகப் பாதையில் திருப்பிவிட வேண்டும். இது



ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்
அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028

ஆன்மிகமலர்
மெயில் புக்

ஆன்மிகமலர்
மெயில் புக்

ஆன்மிகமலர்.காம்
www.aanmeegamalar.com
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்



# எந்தவொரு சூழ்நிலையிலும் ஆனந்தமாக இருக்க

அந்தக் கிராமத்தின் ஓய்வு விடுதியில், ஒரு நாள் இரவு ஓஷோவும் மாநில அமைச்சர் ஒருவரும் அடுத்தடுத்த அறைகளில் தங்கி இருந்தனர். இரவு முழுவதும் முப்பது அல்லது நாற்பது நாய்கள் அந்த விடுதியைச் சுற்றி குரைத்துக் கொண்டே இருந்தன. அமைச்சரால் தூங்கவே முடியவில்லை.

அவர், அன்று காலை முழுவதும் பயணம் செய்திருந்தார். மறுநாளும் அலைச்சல் இருக்கிறது. அதை நினைக்க நினைக்க அமைச்சருக்குக் கோபம் அதிகமானது. நாய்களோ வெறித் தனமாகக் குரைத்து, இரவின் அமைதியைக் கெடுத்தன.

ஆனால், இத்தனைக்கும் மத்தியில் ஓஷோ அடுத்த அறையில் நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார்.

ஓஷோவை எழுப்பிய அமைச்சர், "என்ன மனிதர் நீங்கள்... இவ்வளவு சத்தத்துக்கு மத்தியில் உங்களால் எப்படி உறங்க முடிகிறது?" என்று புலம்பினார்.

ஓஷோ, தனது வழக்கமான கிண்டலுடன் கூறினார்: "அந்த நாய்கள், உங்களுக்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ இங்கு கூடவில்லை; கோஷமிடவில்லை! பாவம், அந்த நாய்களுக்கு... இங்கு ஒரு மந்திரி தங்கி இருப்பது தெரியாது. அவை, பத்திரிகை படிப்பதில்லை. அவற்றுக்கு அறிவும் கிடையாது. அந்த நாய்களுக்கும் உங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

அவை, தங்களுக்கே உரிய குரைக்கும் வேலையைப் பார்க்கின்றன. நீங்கள், தூங்குகிற வேலையைப் பாருங்கள்!" என்றார்.

"நாய்கள் இப்படி ஓயாமல் குரைத்தால், நான் எப்படி தூங்க முடியும்?" என்றார் அமைச்சர்.

உடனே ஓஷோ, "நீங்கள், அவை குரைப்பதை எதிர்த்துப் போராடுகிறீர்கள். அப்படிப் போரா டாதீர்கள். பிரச்னை குரைப்பொலி அல்ல... உங்கள் எதிர்ப்பு உணர்வு. நீங்கள், சத்தத்துக்கு எதிராக இருக்கிறீர்கள்; இந்த நாய்கள் குரைப்பதை நிறுத்தினால்தான் தூங்க முடியும் என்று ஒரு நிபந்தனை ஏற்படுத்தி விட்டீர்கள். நாய்கள் உங்களது நிபந்தனையைக் கவனிக்கப் போவது இல்லை.

நீங்களும் உங்கள் நிபந்தனையை விலக்கப் போவது இல்லை. ஆனால், நிபந்தனையை விலக்கினால் மட்டுமே நிம்மதி பெற முடியும். நடைமுறைக்குச் சாத்தியமானதும் அதுதான்!

நாய்களின் குரைப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். இந்த இரவிலும் எவ்வளவு சக்தியுடன் அவை குரைக்கின்றன...பார்த்தீர்களா? ஏற்பு உணர்ச் சியுடன் கவனித்தால், குரைப்புச் சத்தமும் ஒருவகை மந்திரம்தான்!"என்றார் ஓஷோ.

'உதவாக்கரை யோசனை!' என்று மனதுக்குள் பழித்தபடி போனார் மந்திரி. ஆனால் காலையில், மிகுந்த மகிழ்ச்சியுடன் வந்து ஓஷோவைச் சந்தித்தார் அமைச்சர்!

''ஆச்சரியம்தான்! எனது எதிர்ப்பு உணர்ச்சியை விலக்கிக் கொண்டு, நாய்கள் குரைப்பதைக் கவனித்தேன். ஆழ்ந்து ரசிக்கவும் தொடங்கினேன். அப்படியே உறங்கிப் போனேன்" என்றார் அமைச்சர்.

ஓஷோ நமக்குச் சொல்கிறார்: "இதை, நீ ஞாபகத்தில் வைத்துக் கொள். உன்னைச் சுற்றி இருப்பவற்றால் நீ எரிச்சல் அடைந்தால், உன் முகத்தை உள்முகமாகத் திருப்பு.

எரிச்சலுக்கான காரணம் நீயாகத்தான் இருப்பாய். உனது எதிர்பார்ப்பு அல்லது ஆசை வேறாக இருந்திருக்கும். அல்லது ஏதோ ஒரு நிபந்தனையை உனக்குள் நீ விதித்திருப்பாய். அதுதான் உனது எரிச்சலுக்குக் காரணம். உலகத்தை நமக்கேற்ப நிர்ப்பந்தப்படுத்த முடியாது. அதை எதிர்த்துப் போராடும்போது நீ வெறுப்படைகிறாய்" என்கிறார்.

# முக்கிய சடங்குகள்

இந்துக்கள் தங்களின் வாழ்நாளில் மேற்கொள்ள வேண்டிய முக்கியமான சில சடங்குகளை தர்ம நூல்கள் வரையறுத்துக் காட்டுகின்றன. சடங்கு என்பது ஒரு முக்கிய நிகழ்ச்சி எனப் பொருள்படும். சடங்குகளை எளிமையான முறையில் மேற்கொள்வதே சிறப்பாகும். இவை சம்ஸ்காரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இந்துக்களின் ஐந்து முக்கிய கடமைகளில் 'சம்ஸ்காரமும்' ஒன்றாகும். 'சம்ஸ்காரம்' என்றால் முறைப்படுத்துதல் அல்லது தயார்படுத்துதல் எனப் பொருள்படும். கிரியசூத்திர நூல் 16 புற சடங்குகளை விவரிக்கின்றது. இந்த பதினாறு சடங்குகளும் புறத்தில் செய்யப்பட வேண்டியவை. அகத்தில் செய்யப்பட வேண்டிய எட்டு சடங்குகளையும் இந்நூல் விளக்குகின்றது. இவை கௌதமர் தர்மசூத்திரம் (8:148:25) இலும் விளக்கப்பட்டுள்ளன.

அகத்தின் எட்டு (8) சடங்குகள்:

1. எல்லா உயிர்களிடமும் கருணை
2. பொறுமை
3. பொறாமை இல்லாமை
4. மனத்தூய்மை
5. சாந்தம்
6. நல்ல எண்ணங்களைக் கொண்டிருத்தல்
7. தாராளகுணம்
8. பேராசை இல்லாமை

புறத்தின் பதினாறு (16) சடங்குகள்:

1. திருமணம் (விவாகம்):

தகுதிபெற்ற வயதினை உடைய ஓர் ஆண் ஒரு பெண்ணின் கரங்களைப் பற்றி அக்கினிசாட்சியாக ஏழு முறை அக்கினியைச்சுற்றி வருதல். இறைவன் ஜோதிவடிவானவர்.எனவே அக்கினியான ஜோதியை சாட்சியாக கொண்டு திருமணம் நடக்கின்றது. தமிழர்களின் திருமணத்தின் போது மணமகன் மணமகள் கழுத்தில் தாலி அணிவிக்கிறான். இது மிகவும் முக்கிய சடங்கு ஆகும். பெரும்பாலான இந்துக்கள் வாழ்நாளில் இந்த சடங்கு மிக முக்கியமானதாக மேற்கொள்ளப்படுகின்றது.

2. முதல் இரவு (கர்பதானம்):

திருமணமான ஆணும் பெண்ணும் குழந்தை பாக்கியத்தைப் பெறுவதற்காக இறைவனை பிரார்த்தனை செய்துகொண்டு தாம்பத்திய பந்தத்தில் ஈடுபடுதல். தாயான பெண் ஓர் உயிர் தன் உடலில் தங்கி உடலாக உருவெடுப்பதற்கு தன் கருவறையைத் 'தானமாக' தருகிறாள். கணவனும் மனைவியும் விளக்கேற்றி இறைவனை மனதார வழிபட்டு வாழ்க்கையைத் துவங்குவதன் மூலம் இந்த சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

3. கருவுற்றல் (பும்சவனம்):

கருவுற்ற மனைவி தாய் ஸ்தானத்தை அடைகிறாள். எனவே கணவன் அவளை தாயைப் போல பராமரித்து பணிவிடை செய்யவேண்டும். அவள் மனம் நோகும்படி ஒரு வார்த்தை கூட பேசாமல் விரதம் மேற்கொள்ள வேண்டும். பிருகதாரண்யக உபநிடதம் (6.4), மனைவி கர்ப்பமாக இருக்கும் நேரத்தில் கணவன் அவளுக்கு ஆரோக்கியமான உணவைச் சமைத்துக் கொடுக்க வேண்டும் (அல்லது ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும்) என அறிவுரை செய்கின்றது. கணவன் மனைவிக்காக பிரார்த்தனை மேற்கொள்ள வேண்டும். தன் மனைவி குழந்தையை நலமாகப் பெற்றெடுக்கும் வரை இந்த சடங்கை கடைப்பிடிக்க வேண்டும்.

4. வளைக்காப்பு (சீமந்தம்):

கருவுற்ற பெண் எந்தவொரு சிரமமும் இல்லாமல் மனமகிழ்ச்சியுடன் குழந்தையைப் பெற்றெடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் முக்கிய சடங்காகும். பெரும்பாலும் 8ஆவது அல்லது 9ஆவது மாதத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.

கர்ப்பமாக இருக்கும் பெண்மணிக்கு அவளின் உறவினர்களும் நண்பர்களும் பழங்களும் பலகாரங்களும் ஊட்டிவிட்டு மகிழ்ச்சிப்படுத்துவார்கள். மேலும் வளையல்களும் அணிவிப்பார்கள். கர்ப்பிணி பெண் ஆசைபடும் அனைத்தையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும், அவளுக்கு வருத்தம் ஏற்படுத்தும் விஷயங்களைத் தவிர்த்துவிட வேண்டும் என யஜ்ஞவல்கய ஸ்மிரிதி (3:79) தெரிவிக்கின்றது. மேலும் பிரசவ காலம் நெருங்கும் போது அவளின் கணவன் (மற்றும் பெற்றோர்) எப்போதும் அவளின் அருகாமையில் இருக்கவேண்டும் என்றும் நீண்டதூரப் பயணத்தை தவிர்த்து விட வேண்டும் எனவும் அறிவுரைக்கப்படுகின்றது. இது மிக முக்கியமான சடங்கு.

5. குழந்தை பிறந்த சடங்கு (ஜாதகர்மன்):

குழந்தை பிறந்ததைக் கொண்டாடும் சடங்காகும். இந்துதர்மத்தைப் பொறுத்தவரை ஒருவன் இரண்டு முறை பிறக்கின்றான். தாயின் கருவறையில் தோன்றி பிறப்பது ஒருமுறை, கல்வியைத் தொடங்கும் போதும் இரண்டாவது முறை ஆகும். பிறந்த குழந்தையின் நாவில் தேன் அல்லது சீனிப்பாகு தடவி இச்சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த சடங்கை வீட்டிலுள்ள பெரியவர்கள் அல்லது குழந்தையின் தாய்தந்தை மேற்கொள்வர். அதன்பிறகு அனைவரும் குழந்தையின் நீண்ட ஆயுள், நிறைவான அறிவு மற்றும் தாயின் நலம் ஆகியவற்றிற்காக பிரார்த்தனை மேற்கொள்வர்.

6. குழந்தைக்குப் பெயர்சூட்டுதல் (நாமகரணம்):

குழந்தை பிறந்த சில தினங்களில் குழந்தைக்குப் பெயர்சூட்டப்படுகின்றது. அர்த்தமுள்ள மற்றும் இனிமையான பெயரை தேர்ந்தெடுத்து குழந்தைக்குச் சூட்டுவர். குழந்தையை குளிப்பாட்டி, புத்தாடை அணிவித்து, வீட்டு பூஜை அறையில் குழந்தையின் பெற்றோர் அந்த குழந்தையை மடியில் அமர வைத்து அதன் காதில் தேர்ந்தெடுத்த பெயரை செப்புவார்கள்.

7. குழந்தையை முதன்முதலில் வெளியிடத்துக்கு அழைத்துச் செல்லுதல் (நிஷ்கிராமணம்):

குழந்தை பிறந்து ஒரு மாதம் நிறைவடைந்ததும் அந்தக் குழந்தையைக் கோவிலுக்கு அழைத்துச் செல்வார்கள். குழந்தையின் தாய், தந்தை, சகோதரர்கள், தாத்தா, பாட்டி ஆகியோரும் உடன் செல்வார்கள்.

8. குழந்தைக்கு முதல் சோறு ஊட்டுதல் (அன்னபிராஷனம்):

குழந்தை பிறந்து சில மாதங்களில், குழந்தைக்கு சில பற்கள் முளைக்க தொடங்கியவுடன் அதற்கு சோறு ஊட்டும் சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. தேனுடன் அல்லது பாலுடன் கலந்த சோற்றை அன்னையும் தந்தையும், உற்றார் உறவினரும் குழந்தைக்கு ஊட்டுவார்கள். பிறகு நண்பர்களும் அண்டை அயலார்களும் வருகைபுரிந்து குழந்தையுடன் அன்பு பரிமாறிக் கொள்வார்கள். அனைவரும் குழந்தை நீண்ட ஆயுளும் நிறைவான அறிவையும் பெற பிரார்த்தனை செய்து கொள்வார்கள்.

9. குழந்தைக்கு தலைமுடி நீக்குதல் (சூடாகரணம்): குழந்தை பிறந்த சில மாதங்களில்,



குழந்தையின் தலைமுடி முதன்முதலில் நீக்கப்படுகின்றது. தாய் தந்தையர் பாரம்பரிய உடைகளை அணிந்து கொண்டு குழந்தையை கோவிலுக்கு அழைத்துச் சென்று மடியில் அமர்த்திக் கொண்டு குழந்தையின் தலைமுடியை நீக்குவர். தூய்மையான வாழ்க்கையின் மகத்துவத்தை உணர்த்துவதற்காக இந்த சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

10. குழந்தைக்குக் காது குத்துதல் (கர்ண வேதம்):

குழந்தை பிறந்த ஓராண்டில், குழந்தையின் இரண்டு காதுகளிலும் தோடு குத்தப்படும். 'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்' எனும் குறளைப்போல ஒரு மனிதனிடம் இருக்கும் செல்வங்களில் மிகவும் போற்றத்தக்கது அவனின் கேட்டல் திறன் தான். ஒருவன் தன் வாழ்நாளில் ஞானிகளின் வாய்ச்சொல்லைக் கேட்டு நடந்தால் அவனின் வாழ்க்கை பொன்போல மின்னும் என்பதை உணர்த்துவதற்காக இந்த சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது.



அக சடங்குகள் என்று சொல்லப்படும் எட்டு நற்பண்புகள் தான் கட்டாயமானது (32ம் பக்கத்தில்) புற சடங்குகளின் உண்மையான அர்த்தங்களை உணர்ந்து, அகசடங்குகளைக் கடைப் பிடித்து, எளிமையான முறையில், தானம் மற்றும் தர்மத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மேற்கொள்ளப்படும் சடங்கு சிறப்புடையதாகும்

11. கல்வி ஆரம்பம் (வித்யாரம்பம்):

குழந்தை மழலைமொழி பேசத் தொடங்கியவுடன் இந்த சடங்கு மேற்கொள்ளப்படுகின்றது. குழந்தையின் பெற்றோர் அல்லது மற்ற குடும்ப உறுப்பினர் குழந்தையின் கையைப் பிடித்து 'அ' எனும் முதல் எழுத்தை எழுதி பயில்விப்பார்கள். பிறகு அடிப்படையான எழுத்துகளையும் எண்களையும் கற்றுத் தருவார்கள். குழந்தை பாடசாலையில் சேர்ந்து முறையான கல்வியைக் கற்க துவங்குவதற்கு முன்னர் அதற்கு அடிப்படையான கல்வியை வீட்டிலே கற்றுத் தர வேண்டும் என்பதை இச் சடங்கு உணர்த்துகின்றது.

12. பாடசாலையில் சேர்த்தல் (உபநயனம்):

குழந்தை வளர்ந்து பாலகப் பருவம் எய்திய வுடன், அவனை/அவளை பாடசாலையில் சேர்க்க வேண்டும். இங்கு அந்த குழந்தை முறையான கல்வியைக் கற்க தொடங்கும். முறையான கல்வியை துவங்கும் போது ஒரு மனிதன் இரண்டாவது முறையாகப் பிறக்கின்றான் என சொல்லப்படுகின்றது. கல்வி கற்றுத்தரும் ஆசான் அவனுக்கு தாய்தந்தை ஆகின்றார். ஆரம்பகாலங்களில் உபநயனம் என்பது ஒருவன் யஜ்ஞோபவிதம் (பூணூல்) அணிந்து முறையான குருகுல கல்வியில் ஈடுபடுதல் ஆகும். இந்த சடங்கின் மூலம் அந்த குழந்தைக்கு கல்வியின் முக்கியத்துவமும் அவசியமும் உணர்த்தப்படுகின்றது. கல்வி தான் ஒருவனை பண்டிதனாக்குகின்றது. எனவே கல்வியில் தேர்ச்சிப் பெறும்வரை அவனுடைய எண்ணம் வெண்மையாக (தூய்மையாக) இருக்கவேண்டும்; தீமையானவற்றில் எண்ணம் சிதறி மாசுபடக் கூடாது எனவும் உணர்த் தப்படுகின்றது.

13. வேதங்களைக் கற்க தொடங்குதல் (வேதாரம்பம்):

வேதங்கள் என்பது ரிக், சாம, யஜுர், அதர்வண ஆகியவை ஆகும். வேதம் என்றால் ஞானம் எனப் பொருள்படும். வேதங்களின் சாரமாக உபநிடதங்களும், உபநிடதங்களின் சாரமாக பகவத் கீதையும் விளங்குகின்றன. ஒருவன் தன் வாழ்க்கைக்குத் தேவையான வித்தைகளை (தொழில்திறன்களை) கற்றதோடு விட்டுவிடாமல், அவன் வேதங்களையும் அவசியம் கற்க வேண்டும். மேலும் திருக்குறள், திருமுறை, பிரபந்தம் போன்ற நூல்களும் நல்லறிவை தரும் நூல்களாகும். ஒருவன் வாழ்க்கையில் பணம் ஈட்டுவதற்கு தேவையான வித்தைகளை மட்டும் கற்பதோடு நிறுத்திவிடாமல் நல்லொழுக்கத்தையும் நல்லறிவையும் தரும் நல்லநூல்களையும் கற்கவேண்டும்.

14. பருவமடைந்த சடங்கு (கேஷாந்தம்):

ஆரம்பகாலங்களில் ஆண்களும் பெண்களும் பருவமடைந்தவுடன் 'கேஷாந்தம்' அல்லது 'ரிதுசுத்தி' எனப்படும் சடங்கு மேற்கொள்ளப்பட்டன. பருவ வயதை (பெரும்பாலும் 16 வயதை) அடைந்த ஆணின் சிகையும் முகத்திலுள்ள முடிகளும் மழிக்கப்படும். பிறகு நீராடி விட்டு, பாரம்பரிய உடை அணிந்துகொண்டு, இனி அவனுக்கு உண்டாகும் பாலுணர்வு ஆசைகளை எப்போதும் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க விரதம் மேற் கொள்கிறான். அதேபோல் பருவமடைந்த பெண்களும் நீராடிவிட்டு பாரம்பரிய உடை அணிந்து விரதம் மேற்கொள்கின்றனர்.

பண்டைய காலத்தில் இது எளிமையான ஒரு சடங்கு ஆகும். ஆனால் தற்போது இந்த சடங்கு ஆண்களுக்காக மேற்கொள்ளப்படுவது மிக அரிதாகும். ஆயினும் பெண்களுக்கு மிகவும் பெரிதாகவும் ஆடம்பரமாகவும் மேற்கொள் ளப்படுகின்றது. காலப்போக்கில் இந்த சடங்கில் சாஸ்திரங்களில் பரிந்துரைக்கப்படாத நிறைய விஷயங்களும் சேர்த் துக் கொள்ளப்பட்டுள்ளன.

15. பட்டம் பெறுதல் (சமாவர்தனம்):

உயர்நிலைக் கல்வியில் தேர்ச்சி அடைந்து பட்டம் பெறும் சடங்காகும். இது பெரும்பாலும் ஒருவன் உயர்கல்வியை முடித்துவிட்டப் பின்னர் மேற்கொள்ளப்படுகின்றது. பட்டம் பெற்றவிட்ட அவன் எப்போதும் சத்தியத்தையும் தர்மத்தையும் போற்ற வேண்டும், நேர்மையையும் கடமையையும் கடைப்பிடிக்க வேண்டும், முக்கியமான ஒன்று என்னவென்றால் அவன் எப்போதும் கற்பதை நிறுத்தக் கூடாது என தைத்திரிய உபநிடதம் (1.11.1) குறிப்பிடுகின்றது. "கற்றது கைம்மண் அளவு, கலலாதது உலக அளவு" அல்லவா? பட்டம் பெற்றவுடன் பெற்றோர் காலில் விழுந்து ஆசிர்வாதம் பெற்றுவிட்டு, ஆசானுக்கு நன்றி கூறிவிட்டு, கோவிலுக்கு சென்று வழிபாட்டில் ஈடுபடுவதே இந்த சடங்குமுறை ஆகும். ஆரம்பகாலத்தில் இந்த சடங்கு குருகுலக் கல்வியை முடித்துவிட்டு திரும்பும் போது மேற்கொள்ளப்பட்டது.

(இதன்பிறகு ஒருவன் திருமண வாழ்க்கையில் ஈடுபட எண்ணங்கொண்டால், அவன் திருமண சடங்கை மேற்கொள்வான். குழந்தை பெற்றவுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மற்றமற்ற சடங்குகளையும் தன் குழந்தை(களு)க்கு மேற்கொள்வான்.)

16. இறுதிசடங்கு (அந்தயெஷ்டி):

ஒருவன் வாழ்க்கையின் இறுதிச் சடங்கு என்பது அவன் இறந்துபோனவுடன் அவனின் உடலுக்கு அவனின் சொந்தபந்தங்களும் நண்பர்களும் மேற்கொள்ளும் முக்கிய சடங்காகும். இது அவனுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மேற்கொள்ளப்படுகின்றது. குழந்தைகளின் உடல் புதைக்கப்பட வேண்டும் எனவும் வாலிப வயதை தாண்டிய பெரியவர்களின் உடல் தகனம் செய்யப்பட வேண்டும் எனவும் ரிக்வேதம் (10:16) அறிவுரைக்கின்றது. இந்த சடங்கு ஓரிரண்டு நாட்கள் முதல் பதினாறு நாட்களுக்கு நீடிக்கின்றது. இறந்தவரின் உடல் நீராடப்பட்டு, புத்தாடைகள் அணிவிக்கப்பட்டு, கால் கட்டைவிரல்கள் ஒன்றாக கட்டப்பட்டு, நெற்றியில் திலகம் இடப்படுகின்றது. பின்னர் அவரின் உடல் முறையான ஓர் இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு தகனம் செய்யப்படுகின்றது. பதினாறு நாட்களுக்கு துக்கம் அனுசரிக்கப்பட்டு பின்னர் பதினாறாம் நாள் ஏழை எளியவர்களை வீட்டிற்கு அழைத்து அவர்களுக்கு உணவு தானம் வழங்கபடுகின்றது. இறந்தவரின் சார்பாக ஏழை எளியவர்களுக்குத் அன்ன தானம் வழங்குவதால், அவரின் ஆன்மா இனிவரும் பிறவிகளில் நற்கதி அடையும்.

இந்த பதினாறு சடங்குகளையும் இந்துக்கள் கட்டாயமாக மேற்கொள்ளவேண்டும் என எந்த சாஸ்திரநூலும் தெரிவிக்கவில்லை. மாறாக அக சடங்குகள் என்று சொல்லப்படும் மேற்கூறிய எட்டு நற்பண்புகள் தான் கட்டாயமானவை. புற சடங்குகளின் உண்மையான அர்த்தங்களை உணர்ந்து, அகசடங்குகளைக் கடைப்பிடித்து, எளிமையான முறையில், தானம் மற்றும் தர்மத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து மேற்கொள்ளப்படும் சடங்கு தான் சாலச்சிறப்புடையதாகும். திருமணம், குழந்தைக்குப் பெயர்சூட்டுதல், தலைமுடி நீக்குதல், காது குத்துதல் மற்றும் இறுதிச்சடங்கு போன்ற ஐந்து சடங்குகளை தற்போது பெரும்பாலான இந்துக்கள் மேற்கொள்கின்றனர். காலச்சுழற்சியில் மற்ற சில சடங்குகள் அரிதாகி விட்டன.

"எவனொருவன் புற சடங்குகளை மட்டுமே மேற்கொண்டு எட்டு அக சடங்குகளையும் மேற்கொள்ளாமல் இருக்கிறானோ அவன் இறைவனோடு ஒன்றாகக் கலப்பதில்லை. அவன் மேற்கொண்ட புற சடங்குகள் அர்த்தமற்றுப் போகின்றன. ஒருசில புற சடங்குகளை மட்டுமே மேற்கொண்டிருந்தாலும் எட்டு அக சடங்குகளையும் மேற்கொண்டிருப்பவன் நிச்சயமாக இறைவனோடு சேர்கிறான்" என்று கௌதமர் தர்மசூத்திரம் (8:23) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.



# தமிழகத்தை மாற்றி உலகை திரும்பி பார்க்க வைத்த காஞ்சி அத்திவரதர்

உலகமெங்கும் உள்ள இந்து சமய மக்களால் பேசப்படுகின்ற ஹாட் டாப்பிக் என்னவென்றால், அத்திவரதர் தான்.

மூர்த்தி, தலம், தீர்த்தம், மூன்றுமே காஞ்சிபுறத்திற்கு சிறப்புடையதாகும். திரும்பிய இடமெல்லாம் கோயிலும், பக்தியுமாக இருந்த காஞ்சியை இன்று உலகம் முழுவதும் மீண்டும் திரும்பி பார்க்கவைத்தவர் அத்தி வரதர்.

40 ஆண்டுகாலம் ஜலவாசம் செய்தவர், 2019 ஜூன்மாதம் கடைசியில் குளத்திலிருந்து வெளிவந்து ஜூலை 1–ம் தேதி முதல் பக்தர்களுக்கு சயனித்த கோலத்திலும், ஆகஸ்ட் 1–ம் தேதியிலிருந்து நின்ற கோலத்திலும் காட்சி தந்தவர் ஆகஸ்ட்17 அன்று, மீண்டும் அமிர்தசரஸ் குளத்தில் சயனிக்க புறப்பட்டார், இவ்வளவுதான் அத்திவரதர் செய்தார்.

ஏதும் செய்யாததுபோல இருந்தாலும், அவர் செய்த செயல் இந்து மதத்தில் மிகப்பெரிய எழுச்சியாகும்.

திருப்பதி போன்ற பெயர் பெற்ற கோவில்களில் தான் நாள்தோறும் 50 முதல் 70 ஆயிரம் பேர் வரை கூடுவர் என்ற நிலையை மாற்றினார்.

தமிழகத்திலும், பல்வேறு வசதி குறைபாடு இருந்தாலும், பக்திக்கு முக்கியத்துவம் கொடுத்து, சராசரி 2 லட்சம்பேர் தினந்தோறும் வரிசையில் நின்று பார்க்குமளவுக்கு மக்களிடம் பக்தி மேலோங்கியுள்ளது என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டியுள்ளார்.

ஒருசில அல்ப பதர்களின் கேலிகளைப் பொருட்படுத்தாமல், மக்கள் சாரை சாரையாக காஞ்சியை நோக்கி படையெடுத்ததை பார்த்து, மதமாற்ற கும்பல்கள் வாயடைத்து போய் நின்றனர் தவிர அவர்களால் மேற்கொண்டு பேச வார்த்தை இல்லாமல் செய்தவர் அத்தி வரதர்.

அத்திவரதரால் எழுந்து நிற்க முடியுமா? என்று கேட்ட கயவர் கால் வலு இழந்து, படுத்த படுக்கையானார், அவரின் குடும்பத்தினர்



வந்து அத்திவரதரை தரிசித்து, பிரசாதம் வாங்கி கண்ணீர் மல்க வேண்டிக்கொண்டதன் பின்னர் தான் அந்த அதிமேதாவிக்கு காலில் தெம்பே வந்ததாம்.

வெயில், மழை, சரியான குடிநீர் கிடைக் காமை, உணவு கிடைக்காமை போன்ற பிரச்சனைகளையும் சமாளித்து, அத்திவரதரை காணவேண்டி லட்சக்கணக்கானவர்கள் மத்தியிலும், எலும்பும் தோலுமாக வந்திருந்த வயதானவர்கள், தரிசன வரிசை நெருங்கியதும், தான் அணிந்திருந்த கண்ணாடியை கழற்றி நன்றாக துடைத்து, பட்ட துன்பத்தை மறந்து, தன்னைஅறியாமல் ஆனந்தக் கண்ணீருடன் அத்திவரதரை கரம் கூப்பி வணங்கியதை பார்க்கும் போது உடல் சிலிர்த்ததுதான் போனது.

வெளிநாடு, வெளிமாநிலம், வெளிமாவட்டம் என்று பக்திக்கு தூரம் தடையல்ல, தங்குவதற்கு சொகுசான இடமும் தேவையல்ல, என்று கிடைத்த இடத்தில், உட்கார்ந்தும், படுத்தும் ஓய்வெடுத்து அத்திவரதரை பார்த்த கூட்டத்தினரின் பக்திக்கு நிகர் வேறொன்றுமில்லை.

சயன கோலத்திலும், நின்ற கோலத்திலும் இருந்த அத்திவரதரை பார்க்குபோது, அவரின் பார்வை பொது தரிசனத்தில் வந்திருந்த மக்களை பார்த்தவாறு இருந்தது இன்னும் சிறப்பாக இருந்தது, வி.ஐ.பி., வி.வி.ஐ.பி., தரிசனத்தில் நின்றவர்களை அவர் சட்டை செய்யவில்லை என்பது புரிந்தது.



வெகு காலத்திற்கு பின் மிக நெருங்கிய உறவினரை சந்திக்க வாய்ப்பு கிடைத்தால் நாம் எவ்வளவு சந்தோஷப்படுவோமோ, அந்த அள வுக்கு அத்திவரதரை பார்க்க கூடிய பக்தர்கள் கூட்டம் மகிழ்ந்து சென்றதை பார்க்கும்போது, கலியுகத்தில் இறைவனுக்கும் பக்தனுக்கும் உள்ள இடைவெளி அதிகரிக்கும் என்ற வாக்கு பொய்யாகிப்போனதாகவே தோன்றியது.

தெரிந்தவர்களிடம் பேசும்போது, "அத்திவர தரை பார்த்தியா?" என்ற வார்த்தை கேட்கும்போது, அத்திவரதரை நெருங்கிய சொந்தமாகவே மக்கள் பாவித்துள்ளது வெட்ட வெளிச்சமாக தெரிகிறது.

முதியவர், உடல் நலம் பாதிக்கப்பட்டவர்கள் கூட நான்கு சக்கர நாற்காலியில் அமர்ந்து கொண்டு சிரமப்பட்டு



அத்திவரதரை தரிசித்ததும், அவர்களை தரிசனம் செய்ய வைத்தவர்களுக்கு அவர்கள் நன்றி கூறும்போதும், குழந்தைகள் அத்திவரரை பார்த்தபின் மகிழ்ச்சி பொங்க "அப்பா பாத்துட்டேன்"... "அம்மா பாத்துட்டேன்" என்று குதுகலத்துடன் மழலை மொழியில் தேன் போன்ற வார்த்தை வெகுவாக கேட்க முடிந்தது.

தமிழகமண்ணை, எங்கள் மண், எங்கள் தலைவன் மண் என்று கூறுபோட்ட அரசியல் தலைவர்களின் நாக்கை அறுத்து, **இது அத்திவரதர் மண்** என்று பக்தர்கள் கூட்டம் நிரூபித்ததை பார்க்கும்போது, இந்து மதத்தின் சிறப்பிற்கு ஈடு ஏதுமில்லை என்பதை அறிய முடிந்தது.

"அத்திவரதரை மீண்டும் குளத்திற்குள் வைக்கக்கூடாது" என்ற ஒரே கருத்து பல்வேறு மக்களிடம் ஒருமித்த கருத்தாக நிலவியதை பார்க்கும்போது, அத்திவரதரை பிரிய மனமில்லாத பக்தர்களின் ஆழமான பக்தி புலப்பட்டது.

கூட்டத்தை கண்டு வர அஞ்சிய மக்கள் "ஐயோ அத்திவரதரை பார்க்க முடியவில்லையே" என்ற புலம்பல் பக்தியின் உச்சமாகவே தெரிகிறது.

"எப்படியாவது பார்த்தே ஆக வேண்டும், அடுத்த முறை உயிரோடு இருக்கிறோமோ இல்லையோ" என்று தன் மரணத்தையே வெளிப்படையாக கூறிக்கொண்ட பக்தர்களின் பக்திக்கு நிகர் வேறு எதுவுமில்லை.

ஒரு வயது குழந்தையைக் கூட கூட்டிவந்து வரிசையில் கால் கடுக்க நின்றவர்கள், "என் பிள்ளைகள் இரண்டு மூன்று முறை பார்க்கும் பாக்கியம் இருக்கிறது" என்று பெருமையாக பேசிக் கொண்டது, மகிழ்ச்சியாக இருந்தது.

இந்து மதத்தில் இதுபோன்ற வைபவங்களை கிண்டலும் கேலியும் செய்யும் அரசியல் கட்சியினர்கூட, அத்திவரதரை காண கூடிய கூட்டத்தைப் பார்த்து, வாய் பொத்தி ஆச்சியப்பட்டனர். கேலி செய்தால் வாக்கு பாதிக்கும் என்ற பீதியை அடைய வைத்த பெருமை அத்திவரதரையே சாரும்.

கடவுள் இல்லை என்று கூப்பாடு போட்டவர்களைக் கூட அவர்களின் குடும்பத்துடன் வந்து பார்க்க வைத்த பெருமையும் அத்திவரதரையே சாரும்.

தமிழகத்தில் ஆன்மிக விஷயங்களை ஒருசில கும்பலால் திட்டமிட்டு அழித்துவரும் இந்த வேளையில், அமிர்தசரஸ் குளத்திலிருந்து எழுந்து வந்து, மிகப்பெரிய ஆன்மிக எழுச்சியை ஏற்படுத்தி, உலகம் முழுவதும் ஒரு நொடி திரும்பி பார்க்க வைத்த பெருமை அத்திவரதரையே சாரும்.



**இன்னும் 40 வருடம் ஜலவாசம் செய்யப் போகும் இறைவா? விரைவில் உன் முடிவை மாற்றிக் கொள்... ஜலவாசம் போதும்... நிரந்தரமாக எங்களுடனேயே தங்கி, அடிக்கடி நாங்கள் உன்னை காண அருள் செய், எங்களில் ஒருவனாக, எங்களுடனேயே இருந்துவிடு.**



# நாமஜபத்தை எவ்வாறு படிப்படியாக அதிகரிப்பது?

ஆன்மீக பயிற்சிக்கான அஸ்திவாரமாக கடவுளின் பெயரை நாமஜபம் செய்வதை எஸ்.எஸ்.ஆர்.எஃப். பரிந்துரைக்கிறது. சரியான கால இடைவெளியில் நாமஜபத்தை தரத்திலும் அளவிலும் படிப்படையாக அதிகரித்து வருவது முக்கியம். இது ஆன்மீக முன்னேற்றத்தையும் உயர்நிலை https://www.spiritualresearchfoundation.org பெறுவதையும் எளிதாக்குகிறது.

ஒரு ஸாதகர் இந்த ஆன்மீக பயிற்சி பாதையில் பொதுவாக கடந்து செல்லும் பல்வேறு நடவடிக்கைகள் அல்லது மைல்கற்களை கூர்ந்து கவனிப்போம். ஒருவரின் ஆன்மீக நிலையை பொறுத்து ஒவ்வொரு மைல்கல்லையும் அடைய சில மாதங்கள் முதல் இரு வருடங்கள் வரை தேவைபடலாம்.

நமது வாசகர்கள் பலர் இந்த வலைதளத்தை வாசித்தபின் முதன்முறையாக தங்களது வாழ்வில் கடவுளின் பெயரை நாமஜபம் செய்ய தொடங்கியுள்ளனர். பொதுவாக இந்த வாசகர்கள் ஒரு நாளைக்கு ஒரு சில நிமிடங்களுக்கு மட்டுமே நாமஜபம் செய்ய கூடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் இப்பயிற்சியினை ஆரம்பித்து தொடரும் பொருட்டு ஒரு நாளைக்கு குறைந்தது 10 நிமிடங்கள் நாமஜபத்திற்கான நேரமாக ஆரம்பத்திலேயே நடைமுறைப்படுத்த வேண்டும். அங்கிருந்து நாமஜத்தை படிப்படியாக அதிகரிக்கும் செயல்முறை மெதுவாக தொடங்குகிறது.

அடுத்த நிலை சும்மா இருக்கும் ஒருவர் விழிப்புணர்வுடன் நாமஜபம் செய்ய நினைவுபடுத்திக் கொள்வதாகும். இது இன்னொருவருக்காக காத்திருத்தல் அல்லது வரிசையில் நிற்றல் போன்றவற்றை கூறலாம்.

இதற்குப் பிறகு, ஒருவர் ஸ்தூல செயல்களான குளித்தல், சமைத்தல், நடைபயிற்சி, பேருந்து அல்லது ரயிலில் பயணித்தல் ஆகியவற்றின் போது நாமஜபம் செய்ய முயற்சிக்க வேண்டும். இவை பழக்கவழக்கங்களின் செயல்திறனால் செய்யப்படும் அன்றாட வேலைகளாகும், எனவே அதிகம் சிந்திக்கத் தேவையில்லை. ஆதலால் நாமஜபம் செய்வது எளிதாகிறது. அடுத்த உயர்ந்த நிலை, நம் அன்றாட வாழ்வில் செய்தித்தாள் வாசிப்பது, தொலைக்காட்சி பார்ப்பது போன்ற முக்கியமில்லாத மனம் சார்ந்த நடவடிக்கைகளின் போது, கடவுளின் பெயரை நாமஜபம் செய்வதாகும். எனவே இத்தகைய நேரங்களில் ஒருவர் மனதளவில் நாமஜபம் செய்ய முடியும்.

இதன்பிறகு தினசரி வாழ்க்கையில் முக்கியமான மனோரீதியாக பணிகளை செய்யும் போது, உத்தியோகபூர்வ ஆவணங்களை வாசித்தல் அல்லது எழுதுவது போன்ற நேரங்களிலும் நாமஜபம் செய்தல் மேலும் மேன்மையான நிலையாக கருதப்படுகிறது. அத்தகைய பணிகளை செய்யும் போது கண்கள், புத்தி மற்றும் கைகள் செயலில் உள்ளன, எனவே மனதளவில் நாமஜபம் செய்வது சாத்தியமாகிறது. ஆன்மீக பயிற்சி யை மேலும் மேலும் படிப்படியாக அதிகரிப்பதால் ஆன்மீக வளர்ச்சி அடைவதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

எந்த விதமான செயல்களைச் செய்யும் போதும் நாமஜபம் செய்வது எப்படி தொடர்ந்து சாத்தியமாகிறது என்று விளக்கும் கட்டுரையை தயவு செய்து பார்க்கவும். தற்போதைய காலங்களில், ஒருவர் தமது மதத்தின் கடவுளின் பெயரை நாமஜபம் செய்வதற்கு மேலாக, மறைந்த முன்னோர்களால் ஏற்படும் பிரச்சனைகளிருந்து காத்து கொள்ள குறைந்தது 2 மணி நேரம் ஸ்ரீ குருதேவ தத்தாவின் நாமஜபத்தை அனைவரும் செய்யும் படி எஸ்.எஸ். ஆர்.எஃப். (SSRF) பரிந்துரைக்கிறது.

– தகவல் ஸனாதனின் கையேடு மற்றும்
www.hindujagruti.org
தொடர்பு: 09380949626

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 08825844033.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com

# ஆன்மிகமலர்
## மெயில் புக்




மாதம் தோறும் இரண்டு இதழ்களாக
(இ–புக் வடிவில்) வெளிவரும்
ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தில் நீங்களும்
இணைந்து ஆன்மிக சேவையாற்றலாம்....

உங்கள் பகுதியில் உள்ள கோயில்களின் சிறப்புகள்,
மகான்களின் சிறப்புகள், மற்றும் உங்களுக்கு தெரிந்த
ஆன்மிக செய்திகளையும் எங்களுடன் பகிருங்கள்...

30ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆன்மிக அன்பர்கள்
படித்து பயன்பெற ஒரு பாலமாக இருப்போம்

மேலும் தகவலுக்கு 8825844033 என்ற
வாட்சப் எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்